


# சங்கநாதம்
# SANGANATHAM



சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் – கொழும்பு

Youth League For Sanathana Dharmic Perception

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதம்
## முழக்கம் 13
## ஆடி மாதம் விலை 15/-

பதின் மூன்றாவது இதழ் மூலம்
அதாவது சங்கநாதத்தின் முதலாவது-
நிறைவாண்டுடன்வாசகநெஞ்சங்களாகிய
உங்களை சந்திப்பதில பெரு மகிழ்ச்சி-
அடைகின்றோம்

இன்று சங்கநாதம் தனது ஒருவருட பூர்த்தியை நிறைவு செய்கிறதென்றால் அதற்குக்கு காரணம வாசகர்களாகிய நீங்கள் எமக்குத்தந்துதவிய பூரண ஒத்துழைப்பே ஆகும்..

எட்டுத்திக்கும் நடைபெறும் இந்துசமய அனர்த்தங்களை உடனுக்குடன் சுட்டிக்காட்டுவதுடன் சமய, சமூக .கலை சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு அனுசரனைவழங்கி பலரது பாராட்டைப் பெற்று எர்ந்துவருகிறதென்றால் அதன் பெருமை -வாசகர்களாகியஉங்களையேசாரும்.

இவ்வாறு பல நூற்றாண்டுகாலம் சேவைபுரிந்து சாதனைகளை படைக்க தொடர்ந்தும் உங்கள் அன்பும் ஆதரவும் நிலைத்திருக்க வேண்டுகின்றோம்.
மீண்டும் மறு இதழில்...

ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

- ஞானகோஷம்.
- காமசூத்திரா.
- இராமநாதக்குருக்களுடன்...
- இரு மனம் இணையும் திருமணம்.
- சித்தர்கள் சொன்னவை
- மறுபிறப்பின் மறைவில்.

### ஆலோசனைக்குழு

வண.பூர்ணானந்தகிரி சுவாமிகள்(மடாதிபதி கதிர்காமம்)

திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம்

தமிழவேள் இ.க.கந்தசுவாமி

திரு. இ.ஜெயராஜ்(அ.இ.க.கழகம்)

திரு.க.விசாயகசோதி(நம்.பொறுப்பாளர் சிவானந்ததபோவனம்)

செல்வி. கு.குமாரலஷ்மி (காப்பாளர் சனாதனதர்மயுவழிப்புணர்ச்சிக்கழகம்)

## சங்கநாதத்தின் ஸ்வரங்கள்
## இந்துஅமைப்புக்கள்

*திருநாவுக்கரசு குருகுல ஆதீனம் தம்பிலுவில் அம்பாறை

*மாத்தளை சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகம்
No,38 Vihara Road Matala T.P.066-33014

*திவ்யஜீவனசங்கம் சிவானந்த தபோவனம்
உப்புவெளி திருக்கோணமலை.T.P. 026-21469

*மத்திய மாகாண இந்துக்கலாச்சார அமைச்சு

*நுவரெலியா இந்துக் கலாச்சாரப்பேரவை
No.30 Kandy Road Nuwaraeliya.T. 052-23099

*அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் இணையம்
நற்பிட்டிமுனை கல்முனை T.P 067-21896

*மயூரபதி இந்துசமய அறநெறிப்பாடசாலை

*ஸ்ரீ கிருஷ்ணராலய நற்பணிமன்றம்
167 அம்பக்கோட்டை கேகாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
Ceylon Branch
40, Ramakrishna Road, Colombo 6
Phone: 588253
075 [illegible]
Email: [illegible]

1. 8. 2001

## வாழ்த்துச் செய்தி

முதலாம் ஆண்டினை முழுமை செய்து, இரண்டாம் ஆண்டில் தடம் பதிக்கும் 'சங்கநாதம்' மாத இதழுக்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கிறோம்.

நமது சமயத்தின் உண்மைகளையும், பெருமைகளையும் ஒவ்வொரு இல்லத்திற்கும் எடுத்துச் செல்ல, ஆன்மிகப் பத்திரிகைகளைத் தொடங்குதல் அவசியமென சுவாமி விவேகானந்தரும் அறிவுறுத்தியுள்ளார்.

மதமாற்றம், மேலை நாட்டு நாகரிக மோகம், குடி, போதைப் பொருள்களின் அதிகம் – இவைகளின் பிடியிலிருந்து சமுதாயத்தைக் காப்பதற்கான முயற்சியும், நமது சமயத்திலிருந்துதான் வரவேண்டும். இந்த முயற்சியின் ஒரு அம்சந்தான் சமய போதனை.

எனவே ஆன்மிகப் பத்திரிகைகளின் பணி இன்று மிகவும் வரவேற்கத்தக்கது எனக் கூறத் தேவையில்லை.

'சங்கநாதம்' வரக்கூடிய ஆண்டுகளில் இன்னும் கூடிய சிறப்புடன் ஒலிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# International Society For Krishna Consciousness

Founder Acharya : His Divine Grace A. C. Bhaktivedanta Swami Prabhupada
(Incorporated by Act of Parliament No. 69 of 1997)

ஹரே கிருஷ்ணா

19.07.2001

சங்கநாதம் ஆசிரியர் அவர்கட்கு,

அன்புடையீர்;

சங்கநாதம் பத்திரிகையின் ஒரு வருட நிறைவினை முன்னிட்டு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குகின்றேன்.

தொன்று தொட்டுவரும் மனித இனத்திற்குரிய தர்மம் சனாதன தர்மம் என்று அழைக்கப்படுகிறது. அந்த தர்மத்தை பேணி காக்கும் வகையில் வெளியிடப்படும் "சங்கநாதம்" என்னும் பத்திரிகையின் ஒரு வருட நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலருக்கு தர்மத்தின் நாயகன் பகவான் கிருஷ்ணர் அருள் பொழிய வேண்டுகிறோம்.

தர்மத்தை மீண்டும் நிலைநாட்ட அவதாரம் செய்த பகவான் கிருஷ்ணர் பார்த்தசாரதியாக நின்று தன் பாஞ்சசன்னியம் எனும் திவ்வியமான சங்கை முழங்கியபோது அதன் சத்தம் எதிர்தரப்பினரின் இதயத்தை பிளந்தது போன்று இருந்தது என சஞ்சயன் கூறுகிறார் அல்லவா? அவ்வாறே "சங்கநாதம்" எனும் பத்திரிகையில் ஒலிக்கும் விடயங்கள் கீதையின் சாரமாக என்றும் தொன்று தொட்டு வரும் தர்மத்தையும் சனாதனதர்மத்தையும் விளக்குவதாகவும் அதற்கு இடையூறாக எம்முள்ளே இருக்கும் அசுரசக்திக்கு அச்சத்தை ஊட்டி உண்மையை உணர்த்தும் ஒலியாகவும் விளங்க பகவான் அருள் புரிவாராக.

ஹரே கிருஷ்ணா
என்றும் கிருஷ்ண சேவையில்

ஸ்ரீமான் மஹாகர்த்த தாஸ
ஆலயத்தலைவர்
சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம் (இலங்கைக்கிளை)

188, NEW CHETTY STREET, COLOMBO 13, SRI LANKA TELE : 433325, 075-335431, FAX : 471099, Email : iskcon@sri.lk

HARE KRISHNA HARE KRISHNA KRISHNA KRISHNA HARE HARE
HARE RAMA HARE RAMA RAMA RAMA HARE HARE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம்

# சித்தர்கள் சொன்னவை

தாழ்ந்த லோகங்களைத் தங்கமாக்கினார்கள் நம் இந்து மத சிந்தர்கள். அந்த தங்கத்தை என்ன செய்தார்கள்?

உலக ஆசைகளில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என மூன்றாக வகுத்தார்கள். இவைகளில், இவ்வாசையில் உயிரிழந்தவர்களும் கொடூரங்கள் அடைந்தவர்களும் அழிவுகளும் எண்ணிலடங்காது.

ஆனால் சித்தர்கள். தங்க விக்கிரகங்களாலும். தங்கக் கோபுரக்கலசங்களும் தங்க சிம்மாசனங்களை வடித்து இறைவழிபாடு செய்து அகமகிழ்ந்தார்கள். வறுமையில் வாழும் பெண்களுக்கு திருமணங்கள் செய்வித்து வாழ்வித்தார்கள். அவர்களின் உள்ளங்களில் மண்ணாசையோ, பெண்ணாசையோ பொண்ணாசையோ துளி கூட ஆட்சி செய்ய முடியவில்லை. மண்ணை ஆளும் மன்னர்களும் சித்தர்களைக் கண்டால் , சிம்மாசனம் விட்டு எழுந்து நின்றார்கள். பட்டினத்தார் திரைகடலோடித் திரவியம் தேடிய ஓர் சித்தர். வியாபாரியாக இருந்த அவர் மூலம் ,அன்னியச் செலாவணி நாட்டுக்கு நிறையக் கிடைத்தது அவர் காவி உடுத்தித் துறவறம் பூண்டார். அவரின் இச்செயல் அந்நாட்டு மன்னனுக்குப் பேரதிர்ச்சியை கொடுத்தது. அரசன் பட்டினத்தாரை அழைத்தான். திரவியமும் தேடிய நீ இக்காவி உடையில் என்ன சுகம் கண்டாய் என்று கேட்டான் மன்னன். அதற்குப் பட்டினத்தாரின் பதில் என்னவாக இருந்திருக்கும் என நினைக்கிறீர்கள். "நீர் நிற்க யாம் அமர்ந்திருக்கக் கண்டோம்". என்றார் ஆயிரமாயிரம் குடிமக்களை ஆட்சி செய்யும் அரசன் தான் துறவியைக் கண்டவுடன் எழுந்து நின்றார். துறவியை மரியாதையுடன் அமரச் செய்தது எல்லாமே ஞாபகத்திற்கு வந்தது. சித்தர்களின் இன்னொறு அதிசயிக்கத்தக்கது "திரிகால ஞானம்" ஆகும். முக்காலமும் உணர்தல் ஓர் வியக்கத்தக்க விடயமாகும். சுவாமி விவேகானந்தர் கூறியதைப் போல ஓர் அரச இலையும் ஆண்டவன் கட்டளையின்றிக் கீழே உதிராது என்றார். நடந்தவை, நடப்பவை, நடக்கப்போகின்றவை எல்லாவற்றையும் எடுத்துரைக்கும் திரிகால ஞானம் பெற்றவர்கள் நம் இந்து மத சித்தர்கள். அந்த வகையில் சித்தர்களில் மூத்த சித்தரான அகத்திய முா முனிவரை நினைவு கூறாமல் இருக்க முடியாது. ஒரு மனிதனின் பெருவிரலைப் போல் இன்னொருவனின் பெருவிரல் அமையாது என்பதை அறிந்து துப்புத் துலக்கும் விஞ்ஞான யுகம் இக்கலியுகம்.

ஆனால் என்றோ பெருவிரல் அடையாளம் கொண்டு வரிவட்டம், சுழிவட்டம் எனக் கணக்கிட்டு ஒரு மனிதன் பிறந்த திகதி, மாதம், வருடம் எல்லாம் கணித்த வல்லமை பெற்றவர்கள் ஞானிகள் இந்து மதசித்தர்கள். அதன் வழி வந்த கலையே நாடி சோதிடம். என்பதாகும். நாடிசோதிடம் என்றால்என்ன? அந்த சோதிடத்தை நாடி வருவர்களுக்கு மட்டுமே எழுதப்பட்ட சோதிடம் தான் நாடி சோதிடம்.

(சித்தர்கள் சொன்னவை தொடரும்...)

திருமதி.S.விஜயலஷ்மி
Hatton






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத் தத்துவ வாதிகளின் அரைகுறை ஞானத்தில் உதித்த ஓரிரு புத்தகங்களைப் படித்து விட்டுச் சிறுவனான நரேந்திரன் ஸ்ரீராமகிருஸ்ணரைச் சிலையைப் பூஜிப்பவர் என்று கேலி செய்ததுண்டு. அவரே பிற்காலத்தில் குருதேவரின் அருளால் பூரணஞானம் பெற்று வீரத்துறவியாய் இந்துமதத்திற்கு எதிரான எல்லா வாதங்களையும் பொடிப்பொடியாக்கினார். உருவவழிபாட்டின் மூலம் ராமகிருஸ்ணபரமகம்சர்களை உங்களால் உருவாக்க முடியுமானால் இன்னும் ஆயிரக்கணக்கான உருவங்களை வைத்துக் கொள்ளுங்கள் என்று சுவாமி விவேகானந்தர் முழங்கினார். உருவவழிபாட்டைப்பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவருடைய விளக்கம் இவ்வாறு தான் அமைந்திருந்தது. அதாவது மனிதனின் மன அமைப்பின் படி அவன் எந்த உருவமும் இல்லாத ஒன்றைச் சிந்திப்பது சிரமம். சாதாரண மனிதர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் உயர்ந்த தத்துவங்களை எளிமைப்படுத்தி உருவானதே சிலைவழிபாடு. ஆரம்பத்தில் கடவுளை மனிதன் தன்னைப்போலவே ஒரு மனிதனாகத்தான் காண முடியும் பின்னர் அவனுடைய சிந்தனை விரியும் போது கடவுளைப்பற்றிய உன்னதமான கருத்துக்களை அவன் புரிந்துகொள்ளவான். அதேசமயம் ஒருவன் சிலைவழிபாட்டுடனே நின்று விடவும் கூடாது. அவன் அதற்கு மேலும் வளரவேண்டும் என்பதையும் சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார். ஆயிரம் முறை சிலைகளை உடைத்தாலும் மனிதன் இருக்கும் வரை சிலை வழிபாடு இருக்கவே செய்யும் ஏனெனில் அதன் தேவை அத்தகையது. உருவ வழிபாட்டுக் கண்டனங்களையும் சிலையுடைப்புக்களையும் சமயரீதியான வன்முறைகளையும் அவமானங்களையும் இந்துமதம் காலம் காலமாக எதிர்கொண்டு வருகிறது. ஆனால் எந்தச் சக்தியாலும் இந்துமதத்தின் உன்னதங்களை அசைக்க முடிவதில்லை .எப்படி? உருவவழிபாடு என்பது இந்துமதத்தின் உயர் தத்துவத்தின் ஒரு விம்பம் போன்றது. இறைவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் பல்வேறு வகைகளில் அர்ச்சவதாரம் எனப்படுவதும் ஒன்றாகும். இதுவரை இந்துமதத்ததை தாக்கி அழிக்கநினைத்தவர்கள் எல்லாம் அதன் பிம்பத்துடனையே நிழலுடனேயே சண்டையிட்டுச் சாய்த்துள்ளார்கள்.

## சிலைகளைச் சிதைக்கலாம் சமயத்தை அல்ல.



S.மிரதன்
(சனாதன தர்மக் கழகம்)

புத்தர் சிலைதானே உடைக்கப்பட்டது அவர்தான் இந்துமதத்தவர் இல்லையே எதற்காக நாம் இவ்வளவு விளக்கம் கூறவேண்டும்.? இந்தச் சிலையுடைப்பிற்குப்பின்னால் இந்துமதத்தின் ஒருசிறப்பம்சமான உருவவழிபாடு எதிர்க்கப்படுவதாலேயே சிலவிளக்கங்கள் இங்கு சொல்லப்படுகின்றன. புத்தமதத்தைப்பற்றி விவேகானந்தர் இந்துமதம் இல்லாவிட்டால் புத்தமதம் வாழ முடியாது புத்தமதம் இல்லை என்றால் இந்துமதம் நிலைக்காது.என்று கூறியிருக்கின்றார். டாக்டர் ராஜேந்திரப்பிரசாத் Buddhism emerges from Hinduism and merges with Hinduism என்று கூறினார். புத்தமதம் இந்து மதத்திலிருந்துதோன்றி இந்துமதத்துடனேயே லயிக்கிறது என்பது இதன் பொருள். புத்தரை இந்துமதம் தன் குழந்தையாக அங்கீகரித்துள்ளது. இறைவனின் பத்து அவதாரங்களில் புத்தரையும் ஒருவராகக்காண்பதுதான் நம் சமயம். ஆகவே சிலைகளைச் சிதைக்கலாம் சமயத்தையல்ல. குறிப்பாக இந்துமதத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக ஹைக்கூ



அன்னதானம்

புண்ணிய புதையல்
சொர்க்கத்தின் நுழைவுச்சீட்டு
எளிய தவம்.

மனச்சாட்சி

மனிதனின் உள்ளத்துள்
நடமாடும்
கோர்ட்.





தரிசனம்

கூட்டம் பிரசாதக்
கூடைகளை நோக்கி....
எனக்குக்கிடைத்தது
ஏகாந்தமாய் தரிசனம்.

நீங்களும் ஆன்மீக கைக்கூ எழுதிப் பரிசினை வெல்லுங்கள்.
சிறந்த ஹைக்கூ கவிதைக்கு ரி.சேட் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

## ஏ மனிதா ! எண்ணிப்பார் !

உடுத்தும் உடைகளோ வெள்ளைநிறம் - உன்
உள்ளம் என்ன நிறம் என உன்னையே நீ எண்ணிப்பார்!
உண்மைதனைப் பேசடா என உரமுடன் உரைக்கின்றாய்1
உன்னிடத்தில் உண்மைகள் உறங்கிக்கிடைப்பதை எண்ணிப் பார்!

அன்புடன் நடந்திடு அகிலம் தனை வென்றிடலாம் என்கின்றாய் - உன்
அகம் தனில் அன்பு உண்டோ என உன்னையே எண்ணிப்பார்!
நேர்மையுடன் நடந்திடு நெஞ்சம்நிமிர்ந்துவாழலாம் என்கின்றாய் -
உன்னிடத்தில்
நேர்மையெனும் நேர்த்தியான குணம் உள்ளதா என உன்னையே -
எண்ணிப்பார்!

சமாதானம் சமாதானம் வேண்டுமெனச் சதாகாலமும் சத்தமிடுகிறாய் -
உன்னிடத்தில்
சமாதானம் உண்டோ என உன்னையே எண்ணிப்பார்! வாழ்கையில்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு வேண்டுமெனக் கத்துகிறாய!
உன்னிடத்தில்
இவை எல்லாம் உண்டோ என உன்னையே எண்ணிப்பார்!

அமைதியாய் இரடா என ஆணித்தரமாக அடித்துரைக்கின்றாய் -
உன்னிடத்தில்
அமைதி உண்டோ என உன்னையே எண்ணிப்பார்!
அடுத்தவர் பிழைதனைஅனுதினமும் உன் சுட்டுவிரலால்
சுட்டிக்காட்டுகிறாய்
உன் பிழைதனை என்றாவது எள்ளளவேனும் எண்ணிப்பார்த்தது
உண்டா?
மனிதானக வாழ் என மணிக்கணக்காகச் சத்தமிடுகிறாய் - இந்த
மனிதனிடத்தில் உள்ள மனிதம் மறைந்து பலநூறு
ஆண்டுகளானதை மறந்தாயோ! அல்லது
மிருகங்களை விட உன் நடவடிக்கைகள் சீர்கெட்டுச் சீரழிந்து போவதை
மறந்தாயோ!
எண்ணிப்பார்! ஏ மனிதா !உன்னையே ஒருமுறை எண்ணிப்பார்
V.D.சிவகுமார். ச.த.யு.வி.க (மாத்தளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருடும் குருடும் குருடாட்டம்

குருடும் குருடும் குருட்டாட்டம். குருவின் அருளின்றி திருவருள் கிடைப்பதில்லை. இறைவன் தனது எல்லையற்ற கருணையின் நிமித்தம் சற்குரு வடிவில் வந்து எம்மை ஆத்மீகப்பாதையில் வழிநடத்திச் செல்கின்றான். "தாரமும் குருவும் தலைவிதி" என்பது தமிழரின் பாரம்பரியத்துணிவு.குருவின் தத்துவம் குரு கீதையில் சிவபெருமானே பார்வதி அன்னைக்குக் கூறுவதாகக் கூறப்படுகிறது.இந்துமதத்தில் ஞானகுருபரம்பரை வாழையடி வாழையாகத்தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.சாதகனுக்குப் பக்குவநிலை ஏற்பட்டுக் குருதேவைப்படும் போது " வார்த்தை சொல்ல" சற்குரு தோன்றுவார். "வார்த்தை" என்பது குருவிடம் இருந்து பெறப்போகும் மந்திரத்தைக் குறிக்கின்றது.குரு யார் என்றால் இருளை நீக்குபவர் என்ற பொருள்படும்.இருள் என்பது அறியாமை. ஆணவம் முதலியவற்றைக் குறிக்கும் சற்குருவின் பூரண கடாட்சம் இன்றி அறியாமையைப் போக்கமுடியாது.நிலத்தின் தன்மை நீருக்குண்டு. தாயின் நன்மை பிள்ளைக்குண்டு. குருவின் தன்மை சாதகனுக்கு உண்டு. ஆகையினால் குரு உண்மையாக இருளை அகற்றக்கூடியவராகவும் இகபர சுகத்தைக் கொடுக்கக்கூடியவராகவும் ஞானத்தை ஊட்டக்கூடிய தகமை உடையவராகவும் இருத்தல் மிகமிக அவசியமாகின்றது.

எங்கள் திருநாட்டில் ஞானகுருபரம்பரை வாழையடிவாழையாக வந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக கடையிற் சுவாமி , செல்லப்பா சுவாமி யோகர் சுவாமி, நவநீதர்சுவாமி, சடையம்மா, சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி, சித்தானைக்குட்டி சுவாமி போன்ற பலர் இருந்திருக்கின்றனர். சற்குருவை எப்படி கண்டுபிடிப்பது என்ற கேள்வி இயற்கையாக வருவது இயல்பு.ஒருவர் தனது சற்குருவைக்கண்டவிடத்து அவரது தேகம் விதிர் விதிர்க்கும்.கண்கள் கண்ணீர் மல்கும் நாத்தழதழக்கும் இதயம் உள்ளுருகி அன்பில் நெகிழ்ந்து ஆனந்தத்தில் நிறைந்து நிலைக்கும். தேவைகள் பூர்த்தியான உணர்வு ஏற்படும்.குருவருள் பெற்ற சீடனின் வாழ்வு மலரும். அவரது வாக்கு நோக்கு எல்லாமே பரிமளிக்கும்.இதையிட்டு பிறர் சொற்கேட்டுப் படத்தை வைத்து வழிபடுதல் முறையான வழிபாடாக இருக்கமுடியாது. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகச் சென்றவர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் தோன்றும் பராபரமே. "என்பது தாயுமான சுவாமிகளின் வாக்காகும்.திருமூலர் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தார் என்று ஆராய்ச்சியாளர் கணித்துள்ளனர்.அவர் காலத்திலேயே பொய்க்குருமார்கள் இருந்துள்ளனர். இன்று இந்துக்கள் மத்தியில் எத்தனையோ கபட சந்நியாசிகள் தோன்றியுள்ளனர்.அவர்களால் மக்களுக்கு அனர்த்தம் ஏற்படுகின்றது. சனாதனதர்மத்துக்கு இழிவு ஏற்படுகின்றது.இந்த இழிவு நிலை எமது இந்துக்களின் சமய அறிவின்மையாலேயே ஏற்படுகின்றது. எனவேதான் இக்குருட்டாட்டம் ஆடப்படுகின்றது.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காகக் குருவினைக் கொள்வர்
குருவும் குருவும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுமாறே. (திருமந்திரம்)

கபட சந்நியாசிகள் அனர்த்தத்தை ஏற்படுத்துவர்.

பரமஞானியான திருமூலருக்கே இவர்கள் நிலை கழிவிரக்கத்தை உண்டு பண்ணி இருக்கின்றது.

திருமூலர் சங்கம். கொழும்பு-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடு

திராவிட மக்கள் பெண்ணைத் தெய்வமாகத் தாயாக வீரம் நிறைந்தவளாக கற்புடைநங்கையாகப் போற்றி வந்தனர். இதனால் இம்மக்களிடையே பெண் தெய்வவழிபாடு பெருமிடத்தைப் பெற்றிருந்தது. பொறுமையான எவையுமே பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டு வணக்கத் தெய்வமாகவும் காணப்பட்டது. இப்படி உருவாக்கப்பட்ட ஒரு கற்புடை மங்கையான கண்ணகியின் கதை இக் கற்புக்கண்ணகியின் கதையை இளங்கோவடிகள் காப்பியமாக உருவாக்கி உலகிற்கு வெளிப்படுத்தினார். இக்கண்ணகையம்மன் உருப்பெற்று அகிலம் காக்கும் காளியாகவும் கோபம் கொள்ளும் கொற்றவையாகவும் வணங்கப்படுகிறாள்.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளின் சகோதரரான சேரமன்னன் தன் வெற்றியின் சின்னமாக கண்ணகையென்ற கற்பின் செல்விக்கு ஒருகோயில் எடுக்க இமயத்திலிருந்து கற்களைக்கொண்டுவந்ததாக வரலாறு கூறுகிறது. இப் பெருவிழாவிற்குப் பல நாட்டு மன்னர்களுள் ஈழநாட்டையாண்ட கஜபாகு மன்னனும் அழைக்கப்பட்டு இருந்தான். அப்பெருவிழாவில் கண்ணகியின் வரலாறு கூறப்பட்டு அவளதுசிறப்புக்கள் போற்றப்பட்டன.அந்த அற்புதக்காட்சியைக் கண்ட கஜபாகு மன்னன் இலங்கையிலும் கண்ணகிவழிபாட்டை மேற்கொள்ளும் நோக்கில் இந்தியாவிலிருந்து கண்ணகிசிலை கொண்டுவரப்பட்டதென்றும் கண்ணகியின் காற்சிலம்புத் திருவுருவங்களும் பிற ஆயுதச்சின்னங்களும் கொண்டுவந்ததாக இலங்கைவரலாற்று ஆசிரியர் H.W.கொடித்திறன் தமது இலங்கைச்சுருக்கவரலாறு என்னும் நூலில் கூறியுள்ளார்.ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்ட கண்ணகி வழிபாட்டை இந்துக்கள் கண்ணகையம்மன் என்றும் பௌத்தர்களிடம் பத்தினி வழிபாடாக வளர்ந்தது என்பதை பத்தினித்தெய்வம் பற்றிய பல சிங்கள மொழி நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. ஈழநாட்டின் பிரதான துறையாக விளங்கிய சம்புத்துறை என்று அழைக்கப்பட்ட வட கரையில் கஜபாகு மன்னன் பத்தினிச் சிலையுடன் வந்திறங்கியதாக C.இராசநாயகம் கூறுகிறார்.முதலில் அங்கணாக்கடவை என்ற இடத்தில் பந்தல் அமைத்து விழா எடுக்கப்பட்டு பின் அங்கிருந்து கதிரமலை அல்லது கந்தர்குடை(இன்று கந்தரோடை) ஊடாக சீரணி சுதுமலை சுட்டிபுரம் வற்றாப்பளை ஊடாக கண்டிராச்சியத்திற்குக் கஜபாகு மன்னன் இச்சிலையைக் கொண்டு சென்றான்.கொண்டு செல்லும்போது இத்தெய்வச்சிலை தரை இறங்கிச்சென்ற இடமெல்லாம் அதாவது அங்கணாக்கடவை என்னுமிடத்தில் அங்கணா அம்மன் ஆலயமும் சீரணியில் சீரணியம்மன் ஆலயமும் சுதுமலையில் சுதுமலையம்மன் ஆலயமும் பன்றித்தலச்சி அம்மன் ஆலயமும் சுட்டிபுரம் கண்ணகையம்மன் ஆலயமும் வற்றாப்பளை கண்ணகையம்மன் என்றும் கண்ணகையம்மன் கண்டி இராச்சியம் வரை தெய்வச்சிலை தரைஇறங்கிய இடமெல்லாம் கண்ணகை அம்மனுக்குக் கோயில் எடுக்கப்பட்டது.

இக்கண்ணகை அம்மன் வழிபாடு எவ்வளவு தூரம் இலங்கையில் நிலைத்துவிட்டது என்பதைத் திரு I.வேர்ஸ் சுவாமிகள் கூற்றுப்படி நோக்கின் புளியங்குளத்தில் பல கண்ணகை அம்மன் ஆலயங்கள் காணப்பட்டதென்றும் மன்னார் மடுத்திருப்பதியில் கண்டுபிடிக்கப்பட்ட பெண் தெய்வச்சிலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகை அம்மனினதே என்றும் வன்னியர்களது ஆட்ச்சியில் கண்ணகை அம்மன் ஆலயங்கள் பெருஞ்சிறப்புப்பெற்றிருந்தாக கருதப்படுகின்றது.வடபகுதியை விட கிழக்கிலும் பல கண்ணகை அம்மன் ஆலயங்களும் உண்டு.

மட்டக்களப்பு பகுதியில் காணப்படும் காரைத்தீவு பட்டிமேடு என்ற கிராமங்களில் இன்றும் கண்ணகையம்மன் வழிபாடு சிறப்புற விளங்குகின்றது. இங்கு பூசைகள் வற்றாப்பளை அம்மன் ஆலயம் போன்றே நடைபெறுகின்றன.

அன்னியர் ஆட்சியினால் அழிவடைவந்த இந்து சமயத்தை மீண்டும் புத்துயிர் கொடுத்து எழச்செய்த ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த சமய சீர்திருத்தத்தின் விளைவாக கண்ணகையம்மன் கோயிலாக இருந்த பல ஆலயங்கள் பெயர்மாற்றப்பட்டுத் தனியம்மன் ஆலயமாகவும் புவனேஸ்வரி, நாகேஸ்வரி,நாகபூசணி என்ற திருப்பெயர்களாகவும் மாற்றப்பட்டன.உதாரணமாகச் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் சீரணி நாகம்மாள் கோயில் போன்றன பெயர்மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு இன்று பெரும்பாலும் அம்மன் கோயில்களாகவே காட்சியளிக்கின்றன. எனவே பண்டுதொட்டு பெயரளவில் கண்ணகிக் கதையாக அறிந்து அதை உணர்ச்சி மிகுகூத்தாக கிராமங்கள்தோறும் பயபக்தியுடன் நடாத்திய மக்களுக்கு கண்ணகியைத்தெய்வமாகக்காட்டிய இளங்கோவடிகளும் அவரது தெய்வீகப்பாத்திரத்தை மெருகூட்டி கோயில் அமைத்த சேரன் செங்குட்டுவனும் அவ்விழாவில் கலந்துகொண்டதாலேயே புனிதமடைந்ததாகக் கருதிய கஜபாகு மன்னன் கொண்டு வந்த கண்ணகையம்மன் சிலைகளும் இலங்கையில் கண்ணகையம்மன் ஆலயங்களை அமைக்கவும் வணங்கவும் ஏதுவாயின.

திருமதி. கு. இராஜரட்ணம்
அன்னை இல்லம்
உப்புக்குளம்(மன்னார்)



டாக்டர்:நர்ஸ்! ஆப்ரேசன் செய்யவேண்டிய பேசன்ட் எங்கே காணோம்?
நர்ஸ்:
பாவம்....தேடாதீங்க.....!எங்காவது போய் பிழைச்சுக்கிடட்டும் விடுங்க!

பேச்சை விட சிந்தனை ஆழமானது.சிந்தனையை விட உணர்ச்சி ஆழமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்களில் திருவுருவம்

தேவாரங்களில் போற்றப்பட்டுள்ள திருவுருவங்களில் நடராஜத்திருவுருவமும் சிறப்பானதாகும். இது கலைப்பண்புவாய்ந்தது மட்டுமன்றி சைவ சமயத் தத்துவத்தினை விளக்குவதாக உள்ள ஒரு அற்புத உருவமாகும். இத்தோற்றத்திலே இறைவன் கலையின் தலைவனாகவும் கலையில் சிறந்த ஆசானாகவும் விளங்குகிறான்.இதனாலேயே சிவனைக் கூத்தபிரான் என்றும் நடராஜமூர்த்தி என்றும் போற்றுகின்றனர்.சிதம்பரத்திலே தில்லைக்கோயில் நடராஜத்திருவுருவம் மிகவும் பிரபல்யமானது. நாயன்மார்கள் தங்கள் பாடல்களில் தில்லைக்கோயிலைப்பாடும்போது அங்குள்ள நடராஜதிருவுருவத்தையே போற்றிப்பாடி உள்ளனர். அம்பலக்கூத்தன், ஆனந்தக்கூத்தன், அரங்கநடமாட வல்லாய் என இத்திருவுருவத்தை போற்றியுள்ளனர்.

நடராஜ வடிவமானது மூன்று கண்களும் நான்குதோள்களும் புண்முறுவல் செய்யும் முகமும் சடைமுடியும் அதன்மேல் கங்கையும் இளம்பிறையும் கழுத்தில் படமெடுத்தவ[illegible]வில் நாகமும் கையில் வங்கியாகப் பாம்பும் இடதுகாதில் பத்திரகுண்டலமும் வலது காதில் மகரகுண்டலமும் தரித்து வலதுபாதம் முயலகன் மீது ஊன்றியநிலையிலும் இடதுபாதம் தூக்கிய நிலையிலும் உள்ளதுடன் நான்கு கைகளில் பின் வலதுகையில் உடுக்கையும் பின் இடது கையில் தீயும் அமைந்துள்ளன. முன் வலதுகரம் அபயக்கரமாகவும் முன் இடக்கரம் வசீகரமாகவும் உள்ளன.இத்தோற்றத்தை அப்பர் சுவாமிகள்



குனித்த புருவமும் கொளவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்பாதங் காணப்பெற்றாள்
மனித்த பிறவியும் வேண்டுவதே யிந்தமானிலத்தே.

என்றும் இன்னொரு இடத்தில் "எண்தோள் வீசிநின்றாடும் பிரான்" என்றும் பாடி நடராஜ திருவுருவத்தினைப் போற்றியுள்ளார்.

S. உஷா (சனாதன தர்மக் கழகம்)



ஒருவர்:அந்த ஆளு எதைக் கேட்டாலும் எரிஞ்சு எரிஞ்சு விழுகிறாரே அவர் என்ன வேலை செய்கிறார்?.

மற்றவர்: சிவகாசியில தீக்குச்சி தயாரிக்கிறார்.!

வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகோஷம்

ஒரு லட்சத்து நாற்பத்துநான்காயிரம் பேர் மட்டும் சொர்க்கத்துக்கு போவார்கள் - பைபிள்

வண. சுவாமி. தந்திரதேவா

இந்துமதமும் பௌத்த மதமும் மறுபிறப்புத் தத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றன. ஓர் ஜீவன் பிராரப்த கர்மவினைக் கோட்பாட்டு அடிப்படையில் ஜென்மம் எடுக்கிறது. ஒருவன் குருடன் அல்லது முடவனாக இருந்தால் சென்ற ஜென்மத்தில் அவனுடைய கொடூரமான செயல்கள்தான் காரணம் என்று சொல்வோம். ஆனால் கிறிஸ்தவ மதத்தத்துவத்தில் பூலோகத்தில் ஜீவனுக்கு ஒரேயொரு பிறப்புத்தான இடம்பெறும் என்று கூறுகிறது. ஜீவனுக்கு பூலோகத்தில் ஒரேயொரு ஜென்மம் இருந்தாலும் என்ன கரணத்தினால் சிலர் முடவனாகப் பிறப்பார்கள். சிலர் இளம் வயதில் சாகிறார்கள் . சிலர் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். சிலர் செல்வந்தர்களாக இருக்கிறார்கள். சிலர் ஏழைகளாக இருக்கிறார்கள் கொஞ்சம் சிந்தித்தால் போதும். பூலோகத்தில் ஒரேயொரு ஜென்மம் உண்டு என்ற கொள்கை பிழையானதென்று தெரியமுடியும். அண்மையில் பிரான்ஸ் நாட்டில் சுமார் எழுபது வீத ஜனங்கள் மறு பிறப்புத் தத்துவத்தை ஏற்றக்கொள்கிறார்கள் என்று ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு வந்துள்ளது .

சாவுநேரத்தில் ஜீவனுக்கு என்ன நடக்கும் கிறிஸ்தவ தத்துவம் இதைப்பற்றி என்ன சொல்கிறார்கள். தீர்ப்புத் தினத்தன்று ஒரு லட்சத்து நாற்பத்துநான்காயிரம் பேர் மட்டும் சொர்க்கத்துக்கு போவார்கள் ஏனையவர்கள் எல்லோரும் நிலையான நரகத்திற்குப் போவார்கள் என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது. கடவுள் இப்படிச் செய்வாரா? விவேகம் வேண்டும். மேலும் பூவுலகில் மனிதன் ஒரே ஒரு தரம் மட்டுமே வாழ்ந்து நிரந்தர சொர்க்கம் அல்லது நிரந்தர நரகத்திற்கோ செல்லும் எனக் கிறிஸ்தவ தத்துவம் கூறுகிறது. இது உண்மையாகாது அது உண்மையாக இருக்குமானால் 50 வீதம் பாவம் செய்தவன் நிரந்தர சுவர்க்கத்திற்குச் செல்ல 51 வீதம் பாவம் செய்தவன் மீட்க முடியாத நிரந்தர நரகத்திற்கே செல்ல வேண்டியதாகின்றது. தெய்வீக நியதியினால் தெய்வீக சட்டமும் நீதியும் இவ்வாறு தொழிற்படுவதில்லை. ஒரு சிறிய குழந்தை வீட்டில் குழப்படி செய்தால் அக்குழந்தையின் தாய் நிலையான தண்டனைக்காக அடுப்பு நெருப்பில் போடுவாளா? இதைப்போன்று இந்து மதத்தத்துவம் சாவு நேரம் பற்றி

என்ன குறிப்பிட்டுள்ளது? ஜீவன் அவனுடைய கர்ம வினைப்பயன் படி இன்பமான அல்லது துன்பமான உலகத்திற்குச் செல்லும் பின்னர் மீண்டும் பூலோக ஜென்மம் எடுக்கும் இந்துமதத்தில் நிலையான நரக தண்டனை கிடையாது என்று கூறுகிறது. ஞானிகள் மோட்சம் அடைவார்கள். றோமன் கத்தோலிக்கத்தைப் பொறுத்தவரை ஒருவன் எவ்வளவு கொடூரமான பாவங்கள் செய்தாலும் சாவு நேரத்தில் பாதிரியாரிடம் மன்னிப்புக் கேட்டால் பாதிரியாரின் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வான். சொர்க்கத்திற்குப் போவான். ஆனால் இன்னு மொருவன் தார்மீக முறையில் வாழ்ந்து பின்னர் செத்துப் போனான். சாவு நேரம் பாதிரியாரின் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளவில்லை. அவன் நரகத்திற்குப் போவான். இவ்வாறான கொள்கைகளை இந்துக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றம் ஆபத்தானது.

இந்துமதத்தவர்களே மதமாற்றத்தால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.பிற மதத்தவரின் மதமாற்ற அனர்த்தங்களைப்பற்றி சிந்திக்குமுன் எமது சமய குரவர் நால்வருள் மதமாற்றத்தால் மிகவும் அல்லற் பட்டவர் அப்பர் சுவாமிகளே.தவமுதல்வர் திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் மூவரும் சைவசமயத்திலிருந்தே சைவம் வளர்த்தவர்கள்.அவர்கள் இந்தஉலகத்தில் வாழ்ந்தகாலம் முறையே 16 சம்பந்தர், 24 சுந்தரர், 32 மாணிக்கவாசகர்.ஆனால் அப்பர் சுவாமிகள் 81 ஆண்டுகள் வாழ்ந்து துன்பங்களை அனுபவித்தவர்.அருமையான சைவசமயத்தை விட்டுவிட்டு உலக வாழ்க்கைக்கு ஒவ்வாத சமண சமயத்தில் சேர்ந்தார்.தனக்காக உயிர் வாழ்ந்த தமக்கை திலகவதியாரையும் அந்தரத்தில் விட்டுவிட்டு அமணராகிய சமணப் பள்ளியில் சேர்ந்து அவர்களுடைய தத்துவங்கள் எல்லாம் கற்றுத்தேர்ந்து அவற்றை பரப்புவதில் ஈடுபட்டார்.திலகவதியார் எல்லையற்ற மன உழற்சியுடன் தம்பியாரை சைவத்துககு மீட்பதற்கு அல்லும் பகலும் அனைவரதமும் திருமூலட்டானேஸ்வரத்தைத் தியானித்துத் திருத்தொண்டும் செய்து கொண்டிருக்கையில் திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் உண்டாயிற்று. அக்கொடிய நோய் அப்பரை வயிற்றோடு தொடக்கி, முடக்கி ஆற்றொனாத் துயரைக்கொடுத்தது.அவர் தமக்கையிடம் இரவோடிரவாக வந்து திருவருளான திருநீறு பெற்றுப்பெருவாழ்வு வாழத் தொடங்கினார்.

ஆனால் மதம் மாறியதால் ஏற்பட்ட ஆபத்து அவரைத்தொடர்ந்தது.கெட்டசமணர்கள் அவரைக்கொல்வதற்குப் பல சூழ்ச்சிகள் செய்தனர்.சுண்ணாம்பு அறையில் ஏழு நாட்கள் பூட்டிவைத்தனர்.மதயானையை ஏவிவட்டனர், அது அவரை வலம் வந்து வணங்கிவிட்டுச் சென்றது.நஞ்சுகலந்த பாலைப்பருகக் கொடுத்தனர் அது அமிர்தமாயிற்று. கல்லோடு கட்டி கடலில் போட்ட போது அக்கல் தெப்பமாகி கரைசேர்ந்தார்.ஒரு பாவமும் அறியாத அப்பர் மதமாற்றத்தால் இந்தளவும் ஏற்பட்டது.வெறும் பணத்துக்கும் பதவிக்கும் மதம் மாறுபவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ?
மறு கட்டுரையில் ஆராயப்படும்.

தொடரும்
திருமதி.செல்வம் கல்யாணசுந்தரம்.

மதப்பற்றும் தெய்வநம்பிக்கையும் இல்லாதவர்களிடத்தில்
இறைவனின் புனிதமான நாமத்தின் பெருமையை எடுத்துச்
சொல்ல முயலாதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்வலம் வரும் சங்கு

காயளங்கேணி இறால் ஓடை வட்டவான் - வாகரை.

வாகரைப்பிரதேசத்திற்கு உட்பட்ட காயளங்கேணி இறால்ஓடை வட்டவான் ஆகிய பகுதிகளில் மதமாற்றமுயற்சி தீவிரமாக உள்ளது. இதற்கு இறால்ஓடையில் உள்ள அமெரிக்கமிஷன் காரணமானது.இக்கிராம மக்கள் மிகவும் வறியமீனவராக இருப்பதால் அவர்களது பிள்ளைகளுக்கு உதவிகளை வழங்கி குடும்பங்களையும் பிள்ளைகளையும் மதம்மாற்றி வருகிறார்கள்.கிட்டத்தட்ட 26 வீதமானவர்கள் மதமாற்றப்பட்டுள்ளனர்.



நாசீலன் தீவு வாழைச்சேனை.

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள நாசீலன் தீவு கிராமத்தில் 1977ம் ஆண்டு கிறிஸ்தவமதத்தின் அசம்பிளி ஒவ் கோட் நிறுவனத்தினர் எட்டுக்குடும்பங்களை மதம்மாற்றியுள்ளனர்.அங்கு கிறிஸ்தவதேவாலயம் ஒன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்.இதை அங்குள்ள இந்துஇளஞர் மன்றம் ஆலய பரிபாலன சபைகள் போன்றன எதிர்த்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. வாகரை பிரதேசத்தில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை வணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவ மகராஜ் அவர்களின் அனுசரனையுடன் பலபணிகள் நடைபெற்றுள்ளது.

தாய்தந்தை இழந்த குழந்தைகளைப் பராமரிக்கும் முகமாக தாபிக்கப்பட்ட கதிரவொளி விபுலானந்தர் சிறுவர் காப்பகம் என்னும் இந்து சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்காக அப்பியாசக்கொப்பிகள் உடைகள் என்பவற்றை வழங்கியதுடன் அவற்றுக்கு ஒருதொகை நிதியும் வழங்கியுள்ளார்.வசதிகுறைந்த மக்களுக்கு உடைஉதவிகளை வாகரை கதிரொளி வாழைச்சேனை மாங்கேணி காயளங்கேணி வட்டவான் ஆகியபகுதிகளுக்கு வழங்கியுள்ளார்.வாகரைப்பகுதியில் முழுவதும் சென்ற ஆன்மீக அருளுரைகளை வழங்கியதுடன் ஆன்மீக விளக்கங்களையும் தொடர்ந்து வழங்கிவருகின்றார்.வாழச்சேனை புச்சாக்கேணி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள பெரியசுவாமி ஆலயம் ஸ்ரீ செந்தூர் முருகன் ஆலயம் என்பவற்றுக்கு முருகன் மூலவிக்கிரம் என்பவற்றை வழங்கியுள்ளார்.

கதிரவொளி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களின் சுயதொழிலுக்கு உதவும்முகமாக மேசன் தொழிற்பயிற்சி வகுப்பையும் நடத்தியுள்ளார்.

இவ்வகையில் இந்துசமயத்தை சேர்ந்த மக்களுக்கு சுவாமியின் அனுசரணையுடன் அடிக்கடி இயன்ற உதவிகளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்தின் பாதையிலே.........

நம் இந்துதர்மத்தில் ஆண்களுக்கென ஒரு நெறி பெண்களுக்கென ஒரு நெறி வகுத்து வைத்துள்ளனர் என்பதைக் கவனித்தீர்களா? ஒரு பெண் என்பவள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்ற நெறி முறைகளை வகுத்து வைத்துள்ளனர் நம் முன்னோர். அவற்றை மீறி நடக்கும் போது விபத்துக்கள் ஏற்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. கோலம் போடுவது என்பது பெண்களின் கருத்தை ஒருமித்துச்செய்யும் ஒரு செயல் வீட்டைச்சுத்தமாக வைத்திருப்பது. வரும் விருந்தினருக்கு சுவையாக உணவு சமைத்து உபசரிப்பது. பூஜை அறையில் விளக்கு ஏற்றி வழிபடுவது. வீட்டில் பெரியவர்களின் தேவைகளைக் கவனித்து பணிவடை செய்வது. மற்றும் குழந்தைகளை கவனித்து வளர்ப்பது இவையெல்லாம் பெண்களுக்குரியவேலைகள் அல்லது இயல்பான ஒரு குணமாகச் சொல்லப்பட்டது.இவற்றில் இப்போது எவ்வளவு தூரம் பெண்கள் பொறுப்பெடுத்துச் செய்கின்றனர் என்பது யோசிக்கவேண்டிய விடயமாக உள்ளது.குடும்பத்தின் விளக்காகத் திகழவேண்டியது பெண்ணின் முதல் தர்மம். கடமை அதற்குப்பிறகுதான் அவளுடைய மற்றவெளி வேலைகளோ, அல்லது கடமைகளோ. வேலைக்குச்செல்லும் தாய்மார்கள் தங்கள் இல்லத்தில் பொறுப்புக்களையுயம் முடித்துக்கொண்டு வெளிவேலைகளையும் இழுத்துப்போட்டுக்கொண்டு படாத பாடுபட்டு தன் உரிமைகளை நிலைநிறுத்திப் பணம் தேடி அலைவதைப்பார்க்கையில் ஒருபுறம் பெருமையாகவும் மறுபுறம் பாவமாகவும் உள்ளது.இது காலத்தின் விளையாட்டு யாராலும் ஒன்றும் செய்யஇயலாது இவ்வளவு அலைச்சலுக்கும் இடையே பண்டிகைகளை விட்டுத்தராமல் கணவனைத்தாங்கிக்கொண்டு கலாச்சாரப் பாரம்பரிய வழக்கங்களை பாதுகாத்துக்கொண்டு அப்பப்பா! எவ்வளவு பொறுப்புக்கள். இந்தப்பெண்கள் திரும்பிப்பார்ப்பதற்குள் அவர்கள் வாழ்க்கை ஒரு நதியின் ஓடம் தான்.இறுதியில் இந்துதர்மம் என்ற கடலில் சென்று சங்கமம் அடைவதே சிறந்த குறிக்கோளாக இருக்கமுடியும்.

கடலில் ஒரு பறவை மேலே பறந்து கொண்டிருந்தது. உயர உயரப் பெருமையுடன் சுதந்திரமாகப் பறந்து ஆனந்தத்துடன் தன்னைப்பற்றி மிகவும் பெருமிதத்துடன் இருந்தது. திடீரென்று ஒருசமயம் களைப்புற்று தான் பூமியில் இறங்கி இளைப்பாற ஏதாவது ஒரு இடம் கிடைக்காதா என்று ஏங்கலாயிற்று அப்பொழுது கடலில் சென்று கொண்டிருந்த ஒரு படகின் பாய்மரம் அதன் கண்ணில் தென்பட்டது. உடனே அதன்மீது அமர்ந்து இளைப்பாறியது. எவ்வளவு தூரம் பறந்தாலும் இளைப்பாற கீழே இறங்கித்தான் ஆகவேண்டும். எவ்வளவு சாதனைகள் படைத்தாலும் எவ்வளவு திறமைகள் சமுதாயத்திற்கு பயன்பட்டாலும் பெண் என்பவள் குடும்பத்துக்குத்தான் சொந்தம்.ஆணுக்குச் சமமாகப் பெண்களும் இரவுப்பணிநேரம் கேட்டு வேலை செய்கின்றனர்.ஆண் என்ன? பெண் என்ன? என்றும் எந்தவித வித்தியாசமும் கூடாது என்றும் வாதாடுகின்றனர் பலர்.இது பணம் சம்பாதிப்பதென்ற ஒரேயொரு கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வாதம் தான்.இயற்கைரீதியாகவும் தார்மீகரீதியாகவும் இதை ஏற்றுக்கொள்ளமுடியாது.அதேபோல் எல்லாப்பெண்களுக்கும் எல்லாசூழ்நிலையிலும் இது ஏற்றதென சொல்லமுடியாது.பெண்கள் சம்பாதித்துதர வேண்டும் என்று எதிர்பார்க்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் அவர்களுக்குரிய கௌரவத்தை தர மறுக்கின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் பாதிக்கப்படுபவள் பெண்தானே. அலுவகங்களில் பால்நிலைக் கொடுமைகளுக்கு (Sexual harassment) தண்டனை உண்டு என்று எழுதி மாட்டவேண்டுமாம். இன்னும் உலகம் எங்கெல்லாம் போய் நிற்குமோ தெரியவில்லை. அவரவர் தர்மங்கள் வசதிக்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளப்படும் போது இதுபோன்ற விபரீதங்களைச் சந்திக்கவேண்டியுள்ளது. காதலர் தினத்தன்று மாணவர்கள் தங்கள் கல்லூரிகளிலிருந்தும் வேலைசெய்பவர்கள் வேலையிலிருந்தும் விடுமுறை எடுத்துக்கொள்வது இயற்கை எனக்கருதப்படுகிறது.

எந்தக்காலத்தில் ஸ்திரீதர்மம் புருஷ தர்மம் என்பதை மீறாமல் நடந்துகொள்வது ஒழுங்கான சமுதாயத்திற்கு வழிகோலும். காலத்திற்கு ஏற்றவாறு ஸ்திரீயானவள் வீட்டை அம்போ என்று விட்டுவிட்டு பணம் தேடும் வழியில் தன்னை அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. காரணங்கள் ஆயிரம் கூறலாம். ஆயினும் ஸ்திரீ தர்மத்தை மறந்து போகாமல் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் காப்பாற்றித்தருவது நம்கடமை.

T.பவானி (ச.த.யு.வி.க)

## வாசகர் கருத்து



சண்சுப மங்கள சேவை
இல.49 பஸ் நிலையம்
அட்டன்.

தங்கள் மாத இதழான சங்கநாதம் பத்திரிகை வாசகர்களில் நானும் ஒருத்தி. படிப்படியானமுன்னேற்றத்தைஒவ்வோர்இதழ்களிலும் காண்கின்றேன். "தொடுக்கப்படும் கணைகளிற்கு விடுக்கப்படும் பதில்கள்" பகுதி ஆரம்பித்தது மிகவும் பாராட்டத்தக்கவிடயம். இந்துமக்களின் மனதில் ஏற்படும் சந்தேகங்களைப்போக்க ஒரு வழி என எண்ணுகிறோம்.

*என் இதயத்தில் சங்கமிக்கும் சங்கநாதத்திற்கு....*
மண்ணில் பெருகிவரும்
மாபெரும் கொடுமைகளை
கோயில்களின் அழிவை
மதமாற்றத்தின் அதிகரிப்பை
கொலைகளது கணக்கெடுப்பை
துன்பக்கடலின் அலையடிப்பை
சோகப்புயலடிப்பை
கண்டு மனம் தளராது
வெற்றிப்பாதையில் வீரிட்டு
ஓராண்டைப்போல் பல ஆண்டுகளைப் பூர்த்திசெய்து
இந்து தர்மத்தை இதயங்களில் நிலைநிறுத்தி
இன்னும் என்றும் என்றென்றும்
எங்கள் வாழ்த்துக்களுடன் ஒத்துழைப்புடன்.

S.பிரியதர்சினி
பதுளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாதவிவாதம்.

காயத்ரீ மந்திரத்தைமுதன் முதலில் இறைவனே படைப்பின் தொடக்கத்தில் வெளிப்படுத்தினார் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். இந்தமந்திரம் பழைமையிலும் பழைமையான பரம்பொருளைப்பற்றிய மந்திரம் என்பது அனைவரும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை.

ஓம் பூர்புவஸ்ஸீவ தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந ப்ரசோதயாத் என்பது காயத்ரீ மந்திரம்.

இதன் பொருள்: ஓம்- பரப்பிரமத்தின் அடையாளம் , பூ - ஸ்தூால உலகம் , புவ-இந்தரிஷம் ஸீவ-சொர்க்கம் முதலான சூக்கும உலகங்கள் தத்- த் பொருளான பரமாத்மா கடவுள் அல்லது பிரம்மம்.ஸ விது- இறைவன் அல்லது உலகைப்படைத்தவன். வரேண்யம்- பூஜிப்பதற்குரிய மிக உயர்ந்த . பர்க- பாவங்கள் இல்லது அஞ்ஞானத்தைப்போக்குபவர் மகிமைபெற்றவர் அல்லது ஜோதிமயமானவர்.தேவஸ்ஸ- ஜொலிக்கின்ற . தீமஹி-நாங்கள் தியானம் செய்கின்றோம் திய- புத்தி. ய-எவர். ந-எங்களுடைய . ப்ரசோதயாத்-தூண்டட்டும் என்பது பொருளாகும்.

நம்முள் உறங்கிக்கொண்டிருக்கின்ற ஆன்மீகசக்தியை தட்டி எழுப்பக்கூடியமந்திரமே காயத்ரீ மந்திரம்.காயத்ரீமந்திரம் வேதமாதா என்றும் சந்தஸாம்மாதா என்றும் அழைக்கப் படுகின்றது.பரம்பொருளைச் சக்தியாகவும் தாயாகவும் வழிபடுவது இந்துக்களிடையே உள்ள ஒரு தனிச்சிறப்பு.வேதமந்திரங்களில் தலைசிறந்தது காயத்ரீ மந்திரம் என்பது தெளிவாகத் தெரிகிறது.இந்தமந்திரம் சந்தியாகாலத்தில் ஜபம் செய்யப்பட வேண்டிய மந்திரமாகும்.சம் என்றாள் முழுமையான செம்மையான என்பது பொருள்.தியா என்றால் தியானம் என்பது பொருள்.தியானத்திற்கு ஏற்ற சூழ்நிலையிலுள்ள சூரியோதயமும் சூரிய அஸ்தமனமுமாகிய இரண்டு சந்தியாகாலத்தையே இந்த மந்திரஉபாசனைக்கு நமது ரிஷிகள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.அதனால் சந்தியா உபாசனை என்றாள் காயத்ரீ உபாசனை என்று ஆகிவிடுகின்றது.

ஆகவே இத்தகைய சக்தி வாயந்த மந்திரம் வடமொழியிலேயே உள்ளது.வடமொழியை அதாவது சமஸ்கிருதத்தைப் பொறுத்தவரை இம் மொழியினை நன்கு கற்று அறிந்த ஒருவரே அதனைப் பிழைகளின்றி கூறக்கூடியவர் ஆவார்.அதாவது வடமொழியில் ஒரே எழுத்து பல உச்சரிப்புக்களையும் பல வடிவங்களையும் உடையது.அதாவது வடமொழியில் க என்னும் சொல்லுக்கு பல உச்சரிப்பும் பல வடிவங்களும் உண்டு இவ்வாறு வேறுபட்ட ஒலிவடிவத்தையுடைய வடமொழியிலுள்ள மந்திரத்தை நாம் தமிழில் எழுதி படிக்கும் போது அதன் உச்சரிப்புமுறை வேறுபடுகின்றது உச்சரிப்பு வேறுபடப் பொருள் மாறுபடும் பொருள் மாறுபட பயன்மாறுபடும்.

எனவே காயத்திரி மந்திரம் ஸ்ரீ விஸ்ணு சகஸ்ரநாமம் ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்திரம் மற்றும் ஏனைய தோத்திரங்கள் போன்றவற்றை ஓத விரும்புகிறவர்கள் முறையாக தன்னைத்தயார்ப்படுத்திக்கொண்டு இயமம் நியமம் காத்து உரியகுருவிடம் சென்று மந்திரத்தை ஓதவேண்டுமென்பது முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையாற்றுபவர்களை துன்புறுத்தவேண்டாம்.

அண்மையில் இந்து சமய அபிவிருத்தி சபையின் தலைவர் வண. சுவாமி தந்திரதேவா பத்திரிகையில் இராமகிருஷ்ண மிஷனைப்பற்றி கருத்து தெரிவித்தார். அவருடைய கருத்துக்கு இரா.நாகலிங்கம் (அன்புமணி) பதில் தெரிவித்தார். அதில் இரா. நாகலிங்கம் தெரிவித்த கருத்துள் எம்மதமும் சம்மதம் என இந்து சமயத்தின் அடிப்படைத்தத்துவம் என்ற கருத்து வியப்புக்குரியது. சண் மதங்களுள் ஏற்பட்ட தத்துவப்போட்டியின் போது தான் எம்மமதமும் சம்மதம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதேயொழிய தற்கால மதங்களைப் பற்றிக்குறிப்பிடவில்லை. அத்துடன் சுவாமி. தந்திரதேவாவைப் பற்றிக் கூறிய கருத்து கவலைக்குரியது. தன் வாழ்க்கையை பூரணமாக அர்ப்பணித்து சேவையாற்றும் அவரைப்பற்றி இவ்வாறு கூறுவது கவலைக்குரியது,கண்டிக்கத்தக்கது.

# கதிர்காம ஆலயத்தில் "தமிழ்" கொலை செய்யப்படுகிறது.

"கதிர்காம ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் கவனிக்கவேண்டியது."

பக்தர்கள் அனைவருக்கும் தாழ்மையான வேணருகோள் தயவு செய்து கோயிபக்குள் உட்பிவேசிக்கும் முன் பாதணிகளையும் தலை பாகைகலையும் அணிதத்சு செல்வதை தவிர்த்கக் கொள்ளவும் சகல பலி தண்கொடைளையும் கோழைக்குள் இருக்கும் உல்டியளல் இடவும் பணம் தவிர்த்த ஏனைய நண்கொடைகளை (தஙீகம் வெல்லி ஜம் பொக் போள்) போள்தலைகளை தலைமைகாரியாளயத்தில் வழங்கள் பத்துசிசட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

முசைக்குரிய திருவியங்களை தலைமைக் காரியாலத்தில் வழங்கி பத்துச்ச்ட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

கழிவுப் பொருட்சுளை லெவ்வேறு குடங்களில் போடாமல் அதற்குரிய குப்பைவாளிகளல் குடவும்

முசைகள் நடைபெறும் நேரம்

காலைமுசை

நண்பகல்முசை

மாலைமுசை

இப்பிழைகள் எப்பொழுது திருத்தப்படுமோ?

ரவவொரு சனிக்கிழமைகரிலம் காலை முசை (5.00) தடைபெறமாட்டாதென தாழ்மையுடச் தெறிவித்தக் கொள்கிறேன்.

யோ.கோகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

கொன்றைப் பூமாலையை அணிந்த சிவபெருமானுக்குப் புதல்வராகிய விநாயக் கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் நாம் எப்போதும் துதித்துத வணங்குவோம்.

1. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்.
தாயும் தகப்பனும் முதலில் அறியப்பட்ட தெய்வங்கள் ஆவார்கள்.

2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
கோயிலுக்குச் சென்ற இறைவனை நாள்தோறும் வணங்குவது மிகவும் நல்லது.

3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
நல்ல மனைவியோடு கூடி வாழும் இல்லறமானது நல்ல அறமாகும் துறவறமோ எனில். எழிதில் செய்ய முடியாததால் நல்ல அறம் அன்று.

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
வறியவர்க்குக் கொடாதவர் தேடிய செல்வத்தைக் கள்ளவர் முதலிய கொடியோர் அபகரிப்பர்.

5. உண்டி சருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
உணவைக்குறைத்து உண்ணுணதல் பெண்களுக்கு அழகாகும்.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஊருடன் இணைந்து வாழாது பகைத்தக் கொள்வான் ஆயின், அவன் அடியோடு கெட்டழிவான்.

7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.
கணிதமும் இலக்கணமும் மாந்தர்க்க இரண்டு கண்கள் என்று சொல்லத்தகும்.

8. ஏவா மக்கள் மூவா மருந்து.
பெற்றோர்கள் கட்டளை இட்ட பின்னர்ச் செய்யாது தாமாவே குறிபறிந்து முன்னதாச் செய்யக்கூடிய மக்கள் அப்பெற்றோர்க்க என்றும் முதுமையைத் தராத அமிழ்தமாவர்.

9. ஐயம் புகினும் செய்வன செய்.
பிச்சை எடுத்தாலும் செய்ய வேண்டிய நல்ல செயல்களை விடாது செய்.

10. ஒருவனைப்பற்றி ஓர் அகத்து இரு.
நல்ல குணமுள்ள ஒருவனைத் துணையாகப்பற்றிக் கொண்டு ஒரு வீட்டிலேயே நிலையாக வாழ்ந்திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலையர் சங்கமம்

# யாருக்கும் தெரியாமல்

தொகுப்பு: லோ.அனுஷலா ஜனனி



1. கனகதாசர் என்ற மகான் ஒரு வேடுவர் குலத்தைச்சேர்ந்தவர்.சிறு பிராயத்திலேயே பெற்றோரை இழந்து அநாதையாக அலைந்து கொண்டிருந்தார்.

2.அநாதையாக இருந்தாலும் அவரது மனதில் ஹரி குடியிருந்ததால் அவர் தனிமையாக இருப்பதாக உணரவில்லை. உடலில் உள்ளத்தில் ஓர் அசாதாரண உறுதிபெற்ற வைராக்கியம். உதடுகளும் சதா ஹரி நாமத்தினை உச்சரித்துக் கொண்டிருந்தன.





3.இவரது இயற்பெயர் கணகதாசர் அல்ல.இதுவோர் காரணப்பெயர்.ஒரு சமயம் நாராயணா நாராயணா என்று ஸ்மரித்த வண்ணம் அவர் ஒரு திடல் வழியே நடந்து சென்று கொண்டிருந்த போது காலில் ஒரு பெரிய கல் தடுக்கியது.

4.குனிந்து அந்தக்கல்லை எடுத்து பாதை ஓரமாகப் போட்ட போது கல் இருந்த இடத்தில் பொன்னும் மணியும் கொண்ட புதையல் இருந்தது. ஹரியைத்தவிர வேறு எதிலும் பற்றில்லாத நிலையில் இருந்ததால் அப்புதையலை எல்லோருக்கும் தானமாக வாரி வழங்கிவிட்டார். இதனால்தான் கனகதாசர் என்ற பெயரைப் பெற்றார்.அவரது சொந்தப்பெயர் என்னவென்று தெரியாத நிலையிலேயே மறைந்துவிட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5.ஒருசமயம் வயாசராஜரின் குருகுலத்தில் சிஷ்யராக இருந்த போது.சிஷ்யர்களே இதோ இருக்கும் வாழைப்பழக் குலையிலிலுந்து ஆளுக்கொரு வாழைப்பழத்தை சாப்பிடுங்கள் பிறர் உங்களைப்பார்க்காத படி தின்று விட்டு வாருங்கள் என்றார் குரு.


6.ஒவ்வொருவருக்கும் ஒரு பழத்தை எடுத்துக்கொண்டு மறைவடைமாகக் சென்று விட்டார்கள்.ஆனால் கனகதாசர் மட்டும் பழத்துடன் திரும்பி வருகிறார்.இதைக்கண்ட குரு ஏன் பழத்தைச் சாப்பிடவில்லை என்ற கேட்கிறார்.



7.சுவாமி யாரும் காணாமல் பழத்தைச் சாப்பிட வேண்டும் என்று கட்டளையிட்டீர்கள் அப்படி செய்வது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது என்று தயக்கமாகக் கூறினார் கனகதாசர்.

8.ஏன் மற்றவர்களுக்கு கிடைத்தமறைவிடம் போல் உனக்கு கிடைக்கவில்லையா என்று கேட்டார் குரு.சுவாமி எனது ஹரி ஒளிவு மறைவில்லாமல் எங்கும் வியாபித்திருக்கிறார். அதனால்தான் என்னால் எதையும் அவரிடமிருந்து மறைக்கமுடியாது.அதனாலேயே உங்கள் ஆணையை மீறும் நிலைமை ஏற்பட்டு விட்டது என்று கூறினார்.






9.குருவிற்கு மிகுந்த ஆனந்தம் ஏற்பட்டது.மனிதர்கள் இல்லாத இடம் உண்டு அவர்களுக்குத் தெரியாமல் அவர்களை ஏமாற்றி எதை வேண்டுமென்றாலும் செய்துவிடலாம். ஆனால் எங்கும் சதா நிறைந்திருக்கும் பரம்பொருளை ஹரியின் பார்வைக்குத்தப்பாத இடம் ஏது சிஷ்யா? உனது பக்தியைப் பாராட்டுகின்றேன். என்று பேரானந்தத்துடன் வாழ்த்தி ஆசி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி இல.13

## 200/= 150/= 100/=



<u>மேலிருந்து கீழ்</u>

1.சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்று
2.ஞான சாதனத்திலுள்ள நான்கு படிகளில் ஒன்று.
3.காரண தன் மாத்திரையில் ஒன்று.
4.நால்வகை முத்திகளில் ஒன்று.மாணிக்க வாசகர் எய்தியது திரும்பியுள்ளது.
7.அறிவுடைய பொருளை சித்தாந்தம் இவ்வகையில் சுட்டும் திரும்பியுள்ளது.

<u>இடமிருந்து வலம்.</u>

1.தூலலிங்கம் என அழைக்கப்படுவது.
5.விஷ்னு பெருமான் ஆதிசேடன் மீது இது கொள்பவர்.குழம்பியுள்ளது.
6.கோபத்துக்கு ஒத்தசொல், குழம்பியுள்ளது.
8.இது அறிவு எனப் பொருள்படும்.
9.ராமனின் தந்தை போன்று போற்றப்பட்ட பறவை குழம்பியுள்ளது.
10.வேதத்துக்கு அங்கமாகிய நூல்களில் ஒன்று.
11............ மிரண்டால் காடு கொள்ளாது என்பர்.

குறுக்கெழுத்துப்போட்டி விடை இல.11

இடமிருற்து வலம்
2.மீனவர்
4.கருடன்
5.அகலி
7.புத்தி
10.கலி
11.விராலிமலை

மேலிருந்து கீழ்
1.கரும்பு
2.மீன்
3.வராக
4.லிங்கம்
8.திருமலை
9.ரவி
12.ராதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததியின் வல்லமை

Behind every successful man there is a woman என்று ஆங்கிலப் பழமொழி உண்டு. காலம் காலமாக ஒவ்வொரு ஆண்மகனின் வெற்றிக்குப்பின்னேயும் ஒரு பெண்மணியின் உழைப்பு திரைமறைவில் இருந்திருக்கிறது. மஹிமைகள் மிக்க மஹரிசிகளின் வரலாறுகளைப்பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் மகரிஷிக்கு மனைவியாக இருந்து இல்லறத்திலும் துறவறத்திலும் துணை நின்று கற்புநெறிதவறாமல் வாழ்ந்து காலத்தால் அழியாத பெரும்புகழ்பெற்ற பெண்டிர்பலரும் நம் புண்ணிய பாரதத்தின் புராதனச்செல்வங்களாக திகழ்கின்றனர் என்ற உண்மை சிலருக்குத் தெரிந்திருக்காது. அத்ரி, ப்ருகு, குத்ஸ, வசிஷ்ட்ட, பௌதம, காஸ்யப, அங்கீரஸ ஆகிய ஏழு மஹரிஷிகளை குறிக்கும் அந்த ஏழு நட்சத்திரங்களையே சப்தரிஷி மண்டலம் என்று குறிப்பிடுகின்றோம். இந்த ஏழு நட்சத்திரங்களில் வசிஷ்டரின் தர்ம பத்தினியான அருந்ததி நட்சத்திரம்..நமது திருமணங்களில் அம்மிமிதித்து அருந்ததி பார்ப்பது என்ற வழக்கம் உண்டு திருமணமான பெண் உறுதியான கற்புடன் பதிவிரதை அருந்தியைப்போல கணவனைப்பேணி கற்புநெறிகாத்து உத்தம மண வழ்க்கையை வாழ்வதாக உறுதிமொழிகூறி அம்மிக்கல்லை மிதித்து அருந்ததி நட்சத்திரத்தை பார்ப்பதே அந்தச் சம்பிரதாயம். இப்படிக் காலத்தால் அழியாமல் மணமான மங்கையர்க்கு வழிகாட்டியாக அமைந்துள்ள அருந்ததிக்கு நடந்த அக்கினிப் பரிஷைகள் எத்தனையோ உண்டு.வசிஷ்ட முனிவரின் தர்மபத்தினி தன் கற்பின் திறனால் முக்காலமும் உணரும் வல்லமை பெற்றிருந்தால் அருந்தி ஒருமுறை சிவபெருமானே ஒருபாலயோகி வேடத்தில் அருந்ததியின் மனோபலத்தைச் சோதிக்க பிஷாண்டியாக அவள் முன் நின்றார்.வந்திருப்பது சிவனென்றறிந்து அவர் உடலின் ஒருபாகமான உடையை பெண்ணுக்குரிய மரியாதையுடன் உபசரிக்க சிவனின் மறுபாதியும் சக்தி வடிவமாகி அருந்ததியின் கற்பின் திறத்தை தேவர்க்கும் மூவர்க்கும் உணர்த்தியது.

தேவர்களின் அதிபதி தேவேந்திரன் சுட்டெரிக்கும் தேவன் அக்னி உலகுக்கு ஒளிதருபவன் சூரியன்.இம்மூவரும் ஒருமுறை அருந்ததியின் பதிவிரதா சக்தியை நேரில் கண்டறிய ஆவல் கொண்டனர்.தன் கணவரின் காலைப் பூஜைக்கான திருமஞ்சனத்திற்கு நீர் எடுக்கக்கருதி ஆச்சிரமத்தில் குடத்தை எடுக்கச் சென்றால் அருந்ததி. தங்கள் தெய்வீக சக்தியால் இந்திரன் அக்கினி சூரியன் மூவரும் ஒவ்வொருவராக குடத்தில் கால் குடம் கங்கைநீர் உண்டாகுபடிச் செய்தனர். திடீரென முக்கால்குடம் நீரால் நிரம்பியது. அருந்ததி இதைக்கண்டு அதிசயிக்கவில்லை ஆச்சரியப் படவில்லை. குடத்தின் மீது தன் கையை வைத்துத் தன் சக்தியால் முழுக் குடத்தையும் நீரால் நிரப்பிக் கங்கையையே குடத்திலிருந்து பிரவாவாகிக்கச் செய்தால். தேவர்கள் மூவரும் தங்களை விட உயர்ந்தசக்தி கணவனைப் போற்றும் காரிகைகளுக்கு உண்டென உணர்ந்து அருந்ததியை வணங்கி ஆசிபெற்றுச் சென்றனர். இந்தச் சம்பவத்தினால் சூரியதேவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கருத்துள்ள கதை

ஆக்கம்
பிரசன்னாவருண்.

அக்கினியின் மனைவி ஸ்வாஹா என்பவள். அவளும் கணவனைப் பேணுவதிலும் கற்பினைக்காப்பதிலும் உத்தமமான மங்கை அதனாலேயே யாகங்களில் அக்கினியை மூட்டிய பின் ஸ்வாஹா என்று அக்கினியின் பெயரால் நெய் ஊற்றுகிறார்கள். ஒருமுறை அக்கினி தன் மனைவியிடம் பிரம்மனின் படைப்பிலுள்ள அழகான உருவங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தன்னில் மகிழ்விக்கும்படி வேண்டினான். அவளும் அதுபோல் எத்தனையோ அதிரூப லாவண்யங்களில் தோன்றி மகிழ்வித்தான் திடீரென அக்கினிக்கு அழகிற்சிறந்த அருந்ததியின் ஞாபகம் வந்தது. உடனே ஸ்வாஹாவை அருந்ததியின் வடிவில் தன் முன் வரும்படி கோரினான். சர்வவல்லமையும் தெய்வீக சக்தியும் வாய்ந்த ஸ்வாஹாவால் அருந்ததியின் வடிவத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஸ்வாஹாவின் சக்திக்கு எல்லை இருந்தது ஆனால் எல்லையில்லாக் கற்பின் திறன் அருந்ததிக்கு இருந்தது என்பதை அக்கனி உணர்ந்தான். உத்தமமாதரின் சிறப்பை உலகுக்கு உணர்த்த அக்கினியே இந்த அக்கினிப்பரீட்சை வைத்தான். அதில் அருந்ததி வென்றாள் அக்கினி தோற்றான்.

கட்டிய மனைவி தனக்குமட்டும் கடைசிவரை விசுவாசமாக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு கணவனும் விரும்புகிறான். கட்டிய கணவன் தன்னைத்தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் அந்த உரிமையைத் தரக்கூடாது என்று ஒவ்வொருமனைவியும் விரும்புகிறாள். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் கூட இந்த மனோநிலை இருக்கத்தான் செய்கிறது. இதனால் தான் அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் வழக்கம் இன்னும் மாறவில்லை. கற்பென்பது பெண்ணுக்குமட்டும் ஏன் வலியுறுத்தப்படவேண்டும் அது ஆணுக்கும் ஓர் ஒழுக்கமாக ஏன் இருக்கக் கூடாது என்ற கேள்வி காலம் காலமாக இருந்துதான் வருகிறது. மணநாள் அன்று மணப்பெண் கற்பின் திறனைப்பெற அம்மிமிதித்து அருந்தத்தியைப் பார்ப்பதுபோல மணமகனையும் அதேஅம்மியை மிதித்து மகரிஷி வசிஷ்ட நட்சத்திரத்தை பார்க்கச்சொல்லலாமே.

பணிவு என்பது தாழ்மையின் சின்னமல்ல உயர்ந்த பண்பின் அறிகுறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம்

மருத்துவம்

2)திரிகோணாசனம (முக்கோணநிலை):



<u>செய்முறை :</u>

தடாசனநிலையில் கால்களை இரண்டு முதல் இரண்டரை அடிகள் வரை விரியுங்கள்.உள்ளங்கை நிலத்தை நோக்கியவாறு இரண்டுகைகளையும் தோள்ப்பட்டை உயரத்திற்கு நீட்டுங்கள் மெதுவாக மூச்சை வெளியேவிட்டு உடலை மெதுவாக வலதுபக்கம் சாய்க்கவும் உள்ளங்கையை வலதுபாதத்தில் வைக்கவும் விரல் நுனிகள் வலது கணுக்காலுக்கருகில் உள்ளநிலத்தைத் தொடவேண்டும் கால்கள் இரண்டும் வளையாமல் நேராக இருக்கவேண்டும். இடதுகையை மேலேதூக்கிப் பூமிக்கு இணையாக நீட்டவும். முன் பக்கம் பாருங்கள் மூச்சு இயல்பாக வந்துபோகட்டும். மெதுவாக இடதுகையை பழைய நிலைக்குகொண்டுவாருங்கள் வலதுகையை நிலத்திலிருந்து தூக்குங்கள். அதேநேரத்தில் உடம்பைநிமிர்த்தி இரண்டு கால்களை ஒன்றுசேர்த்து நேராக தடாசனத்தில் நிற்கவும். இரண்டு அல்லது மூன்று நீண்டபெருமூச்சுகளுக்குப் பிறகு இடது பக்கம் சாயுங்கள்.

<u>நன்மைகள்:</u>

கால், கை, இடுப்பு ஆகியவைகளிலுள்ள விறைப்புத்தன்மை நீங்குகிறது. முதுகுவலியைப் போக்குகிறது. கழுத்துச்சுழுக்கு குணமாகிறது. மார்பை விரிவாக்குகிறது.

3) சூரியநமஸ்காரம் (இதழ் இரண்டில் உள்ளது)

யோகாசனக்குழு

செய்ய முடிந்தவன் சாதிக்கிறான் செய்ய முடியாதவன் போதிக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாட்சணியாரின்

# காமசூத்ரா

ஆண்களே உங்களுக்காக !
பெண்களே உங்களுக்கும் தான்!

காஞ்சிப்பெரியவர் காமகோடி பீடாதிபதிகள் ஒரு மஹாமுனிவர். அவரே காமசூத்திரத்தின் ஓர் அங்கமான பரிவாங்கயோகம் என்ற காமசூத்திரத்தின் ஓர் அங்கமான வாட்சணிய மாமுனி காட்டித்தந்த கலையைக் கடைப்பிடித்தார் என்றால் அதுவும் அர்த்தமுள்ள இந்துமதத்திற்காக அதைசெயல்படுத்திச் சைவசமயத்தை நிலைநாட்டியுள்ளார் என்றால் இந்துக்களே சிந்தியுங்கள்! இந்துமதம் ஓர் ஆதி அந்தமில்லா மதம் ஆழமான கருத்துக்கள் உள்ள மதம். பிரம்மா, அன்னை சரஸ்வதியை தன்நாவிலே வைத்துப்போற்றுகிறார். விஸ்ணு இதயக்கமலத்தில் நிறுத்தியுள்ளாராம்.சிவனோ தன் இடையில் இருத்தி தன்னில் சரிபாதியாக அர்த்தநாரீஸ்வரர் என்று காட்சி தருகிறார். இம் மும்மூர்த்திகளின் சக்தியால்தான் இன்று உலகம் இயங்குகின்றது. ஆண்களைப் படைத்த இறைவன் ஏன் பெண்களைப் படைத்தான் மலர்களில் ஏன் மகரந்தச்சேர்க்கை? கற்களில் கூட ஆண்கல் பெண்கல் என்று உண்டு இதை ஜியாலாஜி படித்தவர்குள் அறிவார்கள்.பெண்ணிற்கு சுரோநினம் தந்த இறைவன் ஏன் ஆணுக்கு விந்தைத்தந்தான்? அர்த்தமுள்ள இந்துமதத்தை பற்றி ஆழமாகச் சிந்திப்போமே சூரியனை ஆண்கிரகமாகவும் சந்திரனை பெண்கிரகமாகவும் இந்துமதம் ஏன் வர்ணித்தது ஓ இந்துக்களே நம் எல்லோருக்கும் இதன் அர்த்தம் தெரியுமா? பெண்ணுக்கு ஏன் மாதத்தில் ஒருமுறை மாதவிடாய் நிலவுக்கு ஏன் மாதத்தில் ஒருமுறை அமாவாசை இவற்றிற்கெல்லாம் விளக்கம் தந்தவர்கள் தான் காமசூத்திராவை வடித்த வாட்சணிய மாமுனிவர். இது ஒரு விஞ்ஞானம் இந்த சரீரத்தை ஆரேக்கியமாக வைத்துக்கொள்ள மனதைத் தெளிவுபடுத்திக்கொள்ளத் தீர்க்கத்தரிசனத்துடன் நல்ல சந்ததியினரை பெற்று நல்லதோர் சமுதாயம் உருவாக வழி வகுத்த மதம் நம் இந்துமதம். தவசிகன் எல்லோரையும் இன்னல் தந்து கெடுத்துவிடுவான் இந்திரன் என்று நம் இந்துமத புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

அந்த இந்திரன் யார்? விந்திரன்-திரன் என்பதே அதன் பொருள். விந்தின் திறன் என்ற சொல்லைப் படுவேகமாக இருபத்தைந்து முறை சொல்லிப்பாருங்கள் இந்திரன் என்ற சொல் மருவி வரும். ஆக வந்துவிட்டான் நொந்துகெட்டான் என்ற ஓர் பழமொழியும் உண்டு பலமான உரமான ஒரு கொய்யாவிதை காக்கையின் எச்சத்தால் ஓர் பெரும் பாறையில் விழுந்தாலும் அது பாறையைப்பிழந்து கொண்டு வேர்விட்டு வளர்வதை கண்டிருப்பீர்கள் ஆக ஓர் சமுதாயத்தில் ஆரோக்கியமான ஓர் ஆண் மகன் ஆரோக்கியமான விந்தை உற்பத்தி செய்து ஆரோக்கியமான குழந்தையைப் பெற்று ஆரோக்கியமான சமுதாயத்தையே உருவாக்க எத்தனித்த நம் தவசிகள்மாமுனிவர் வாட்சணியர் போன்றோர் காட்டித்தந்த காமசூத்ரா ஒரு வரப்பிரசாதம் அல்லவா? இது கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் சுழிப்பவர் பேதை அல்லவா எனவே உங்கள் விந்தின் திறனைக் கூட்டுங்கள் விந்தின் திறனை பெருக்கும் வழிகாணுங்கள் தம்பதியரின் இரு உள்ளங்களும் சாந்திநிலை அடையும் வழியை தேடுங்கள் உங்கள் குடும்பத்தை ஒரு கோயிலாக்குங்கள் அதற்கு வழிகாட்டிய வாட்சண்ய மாமுனிவரை வணங்குங்கள் .அன்னமய கோஷத்தைத்தாண்டி மனோமயகோஷம் பிராணமயகோஷத்திற்கு வாருங்கள். அதற்கு என்னதான் வழிசொன்னது

உருவான உடலைக்குறிக்கும் பிராணமயகோஷம் என்றால் பிராணபலத்தை குறிக்கும் அதாவது சுவாசிக்கும் காற்று இதிலிருந்துவரும் பிராணன் (உயிர்) பலத்தைக் குறிக்கும். மனோன்மய கோஷம் என்றால் மனவலிமையைக் குறிக்கும் இந்த மூன்று சாஸ்திரங்களும் ஒன்றினையும் போது வெறும் மருந்து மாத்திரைகள் புஸ்வானமாகிவிடும் என்பதே மகரிஷிகளின் வாக்கியம். அதில் ஒன்றே வாட்சண்ய மாமுனிவரின் காமசூத்ரா. அதனை எடுத்துரைக்கும் சங்கநாதம் மீண்டும் வாட்சணியரின் ஆழமான கருத்துக்களை வெளிக்கொணர்வது இந்துக்கள் செய்த புண்ணிய பலன் என்றே சொல்லவேண்டும்.

Dr.P.A.Suresh (S.M.P)
India, Hatton.

# தினசரி சொல்லவேண்டிய மந்திரம்

துன்பங்கள் விலக முருகன் சுலோகம்
(ஆதி சங்கரரின் ஸ்ரீ சுப்ரமண்ய புஜங் மாரலயிலிருந்து)
மயூ ராதிருடம்மஹா வாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் சித்தகேஹம்
மஹீதேவ தேவம் மஹா தேவ பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோக பாலம்.

தினமும் பெண்கள் கூறவேண்டியது
சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதகே சரண்யே
த்ரயேம்பகே தேவி நாராயணீ நமோஸ்துதே
(இதை மனதிற்குள் எப்பொழுதும் பெண்கள் சொல்லிக்கொண்டிருந்தால் வறுமை நீங்கும் தினமும் பலமுறை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தால் அஷ்டலெட்சுமியின் அருள் கிட்டும்.)



ஒருவர்: உங்கபையன் எதிர் காலத்தில் ஓட்டலில் தான் வேலைக்கு லாயக்கு
பையனின் அப்பா: எதை வெச்சு சொல்றீங்க?
ஒருவர்: A ஃபார் ஆமலட் B ஃபார் பிரட் C ஃபார் சிக்கன் என்று படிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வுக்கு ஆன்மீக மூலிகைகள்.

## அறுகு (Counch Grass) :

அறுகு போல் வேரிட்டு ஆல்போல் தழைத்து வாழ வேண்டும என்று மணமக்களை வாழ்த்துகிறோம். அறுகின் குணத்தை உலகம முழுவதும் உணர்ந்து பயன் படுத்தி வருகிறார்க்ள. என்றும தென்னாட்டவர் பிள்ளையார் பிடித்து வைத்து பூசைசெய்யும நாட்களில் அறுகம் புல்லைப் பயன்படுத்துகிறார்கள். அறுகில் ஒன்பது வகைகள் உள்ளன. சிற்றறுகு , புல்லறுகு, பாளையறுகு, உப்பஷபறுகு, கூந்தலறுகு, வெள்ளறுகு ,ஆற்றறுகு யாளைஷனயறுகு கொடியறுகு இவைக்கு உருவத்தால் வேறுபாடுள்ளது போல் மருத்துவக் குணத்திலும் சிறிது வேறுபாடுண்டு.

குறிபாப்ாக வெள்ளறுகு மருந்திற்கு சிறப்பாகப் பயன்படுகின்றது. வெள்ளறுகு தனித்தும் மருந்துகளோடு சேர்ந்தும சிறந்த குணமனிக்க வல்லது. கொடியறுகு கூற்தல் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் எண்ணெய்மருந்துகளில் சேர்க்கப்படுகிறது மற்றும் தானி[illegible]ங்களை நீண்ட நாட்கள் கெடாதிருக்கவும் பயன்படுத்துகிறாகள்.

<u>பேன், பொடுகு, நீங்க மருந்து.</u>

அருகம்பல் :300 கிராம்

எள் எண்ணெய் :600 கிராம்

அருகம்புல்லைத் தண்ணீர் விடாமல் மைபோல அரைத்துக் கொள்ளவும் எள் எண்ணெய்யை ஒரு மண்பானையில் ஊற்றிச் சிறிது சூடேறிய பின் அறுகம்புல்லைப் போட்டு மூடிச் சிறு தீயாக எரிக்கவும். தைலபதத்தில் இறக்கவும். எட்டு நாட்களுக்கு ஒருமுறை தேய்த்து முழுகலாம். நாளும் தடவி சீவிவரலாம் ஆண், பெண் இருபாலாருக்கும் நல்லதாகும்.

<u>சில் விஷம் நீங்க மருந்து:</u>

அருகம்புல் : 500 கிராம்

மிளகு : 10 கிராம்

அருகம்புல்லைக் கையால் கசக்கிக் கொள்ளவும் மிளகை ஒன்றிரண்டாக உடைத்துக் கொள்வும். இரண்டையும் ஒரு மண்பானையில் போட்டு ஒரு லீட்டர் தண்ணீர் விடடு மூடி சிறு தீயாக எரித்து ஏறத்தாழ இருநூற்றைம்பது மி. லீட்டர் அளவுக்கம் சுண்டியதும இறக்கவும். சில்விஷம் கடிபட்டவருக்கு காலைப் பொழுதில் நூறு மில்லிலீட்டர் மருந்தைக் கொடுக்கவும். மூன்று நான்கு முறைகள் பேதியாகும். பேதியான அன்று மோரும் சோறும் மட்டும் உணவாகக் கொடுக்கவும்.

குறிப்பு : ஒரு சிலருக்கப் பேதிகூடுதலாக ஏற்படலாம். அப்படி ஏற்பட்டால் சிறிது வெல்லம அல்லது மூன்று தேக்கரண்டி தேன் அல்லது நூறு கிராம் தயிரைக் கொடுக்க பேதி நிற்கும்.ஒரு முறை மருந்து கொடுத்து நோய் குணமாகவில்லை என்றால் நான்கு நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று வேளைகள் கொடுக்கலாம், நோய்குணமாகும்.

நோய்தீரும்வரை, வேர்க்கடலை, எண்ணெய்ப் பண்டங்கள்முட்டை மீன் உருளைக் கிழங்கு கேப்பை பறங்கி பூசனி சுரை மொச்சை பழையது இவைகளை நீக்குவது நல்லதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமனம் இணையும் திருமணத்தின் அர்த்தங்கள் தான் என்ன?

திருமணம் ஒருவனை முழுமையாக்க உதவுகிறது.

திருமணம் சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகிறது என்பது நம்பிக்கை.இவ்வாறு கூறுவதன் காரணம் இதன் புனிதத்தன்மையை விளக்குவதற்காகும்.இவ்வாறான ஒரு புனிதமான நிச்சயத்தை ஏன் செய்கிறார்கள் என்பது பலருக்க எழும் கேள்வியாகும்.

இந்துமத ஆசரத்தின்படி திருமணம் செய்யப்பட்டவனே நிறைவான மனிதனாகக் கொள்ளப்படுகின்றான்.அதாவது ஒருவன் முழுமையடைவதற்கு அவசியமாக உள்ளது திருமணமாகும் ஒரு இந்துப்பெண்ணைப் பொறுத்தவரையில் விவாகம் செய்த ஒரு இந்துப்பெண்ணே எல்லாச் சுபகாரியங்களிலும் முன்நிற்கக்கூடிய தகுதியைப் பெற்றவள் ஆகின்றாள்.இதனாலேயே திருமணம் செய்தபெண் தர்மபத்தினி எனப்படுகின்றாள்.சுபகாரியங்கள் இடம்பெறும்போது விவாகம் செய்து கணவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சுமங்கலிப்பெண்களே பெரிதும் மதிக்கப்படுகின்றாள். ஏனெனில் இவ்வாறான சுமங்கலிப்பெண்களைக்கொண்டு செய்யும் காரியங்களில் தான் இலட்சுமியின் அருள் பூரணமாக இருக்கும் என்பது நம்பிக்கை.இதன் மூலம் ஒருபெண் தன்னை முன்னிலைப்படுத்த தனது ஆற்றலை மேம்படுத்த ஏனையவர்களால் மதிக்கப்பட திருமணம் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. விவாகம் என்றாள் வடமொழியில் சுமத்தல் என்று ஒருபொருளுள்ளது.அதாவது தர்மகாரியங்களைச் சுமந்து செய்ய வேண்டியபொறுப்பு விவாகம் செய்த தம்பதிகளுக்கு உண்டு இதனாலேயே இல்லறமல்லது நல்லறமன்று என ஔவையார் கூறுகிறார்.அதவது நல்லறங்களை செய்வதற்குத் திருமணம் காரணமாக உள்ளது. அந்தணர்களைப்பொறுத்தவரை தேவகர்மம் யாககர்மம் என்பவற்றை செய்வதற்கு விவாகம் மிகமுக்கியமானதாக உள்ளது.சுகதர்மியுடன் அதாவது மனைவியுடன் உள்ளவனே ஒருயாககாரியத்தைச் செய்யத் தகுதியானதாக கூறப்பட்டுள்ளது.மந்திரத்திலே தர்ம பிரஜார்த்தம் விருணீமஹே என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள் தர்மத்தை செய்வதற்காக உன்னை ஏற்கின்றேன் என்பதாகும் எனவே ஒருவர் தனது வாழ்கையில் தான் புரியும் செயல்களில் தர்மங்கள் முழுமை பெறத் திருமணம் அவசியமாகும்.

இவ்வாறு திருமணம் செய்வதற்கு மனைவியைத் தேர்வு செய்வது என்பது மிகவும் முக்கியமானது ஆகும். இவ்வாறு மனைவியைத் தேர்வுசெய்வதை வரன்பார்த்தல் என்று சொல்லப்படுகின்றது.வரன்தேடித் தேர்ந்தெடுத்தன் பின்னர் சோதிடம் பார்த்தல் இடம் பெறும் பெண் பிள்ளையின் ஜாதகங்களில் பொருத்தம் பார்த்தல் நிகழும் ஜாதகம் பொருந்தியிருப்பின் பெண் பார்த்தல் ஏன்னும் பெண் பார்க்கும்முறை உள்ளது.இதன் பின்னர் பெண்ணை அவர்களுக்கு பிடித்து இருந்தால் சம்பந்தம் கலத்தல் என்னும் நிகழ்வு இடம்பெறுகிறது.இருவீட்டாரும் ஒருவருடைய வீட்டிற்கு சென்று உண்டு விருப்பங்களை தெரிவித்துக்கொள்வதாகும்.இதன் பின்னர் நடைபெறும் நிகழ்வுகளுடன் அடுத்தஇதழில் சந்திக்கும் வரை சற்றுச் சிந்தியுங்கள்.

S.விஜயந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஏன்.....எதற்காக?



## சங்குமுழங்குவது ஏன்

ஆலயங்களிலும் வீடுகளிலும் பூஜைக்குமுன் ஒருமுறை அல்லது பலமுறை சங்கை ஊதுகின்றோம் சில சமயங்களில் ஆராத்திகாட்டும் போது அல்லது மங்கல நிகழ்சிகளின் பொழுதும் சங்கு ஒலிக்கப்படுகின்றது.போர் தொடங்குவதைக்குறிக்கவோ அல்லது போரில் ஒரு படை வெற்றியடைந்ததை அறிவிக்கவோ சங்கு ஒலிக்கப்படுவது உண்டு. சங்கை ஊதும் போது சிருஷ்டிக்கும் ஆதியாக விளங்கும் ஓம் எனும் நாதம் எழுகின்றது.ஓம் என்பது மங்களகரமான ஓசையாகும் சிருஷ்டி தொடங்கும் முன் இறைவனால் இவ்வொலி எழுப்பப்பட்டது.இது உலகையும் அதற்கு ஆதாரமான பேருண்மையையும் குறிக்கும்.

சங்காசுரன் என்னும் அசுரன் தேவர்களைப்போரில் முறியடித்து வேதங்களைத்திருடிக்கொண்டு கடலுக்கடியில் போய் பதுங்கிக் கொண்டான்.தேவர்கள் விஸ்ணுவிடம் முறையிட்டனர். பகவான் மீன் உருவம் எடுத்து அசுரனைக் கொன்றார்.பிறகு அவனுடைய காது தலை இவற்றிலிருந்த சங்குபோல உருவமுள்ள எலும்பினைஊதினார். அதனின்று ஓம் என்ற ஓசை எழுந்தது.சங்காசுரனிடமிருந்து தோன்றியதால் சங்கு என்ற பெயர் ஏற்ப்பட்டது.இறைவன் ஊதிய சங்கின் பெயர் பாஞ்சஜைன்யம். இறைவன் தன் நான்கு கைகளில் ஒரு கையில் எப்பொழுதும் சங்கு ஒன்றை ஏந்தியுள்ளார். மனித வாழ்கையின் நான்கு குறிக்கோள்களில் தர்மம் அல்லது நேர்மையான வழி ஒன்றாகும்.சங்கு தர்மத்தைக் குறிக்கின்றது.இவ்வாறு சங்கு தீயனவற்றின் அளவையும் நல்லனவற்றின் வெற்றியையும் காட்டுகின்றது.சங்கினை நம்காதுக்கருகில் வைத்துக்கேட்டால் கடலலைகளின் ஓசையைப்போன்ற ஓசையைக்கேட்கலாம்.சங்கொலி மற்றும் பிற வாத்தியங்களில் ஒலி எழுப்புவதற்கும் மற்றொரு காரணமும் உண்டு. மங்களகரமான நேரத்தில் வழிபாட்டின் நடுவே தேவையற்ற பேச்சுக்களோ ஓசையோ காதில் விழாதவாறு மூழ்கடித்துவிடும். விசேஷமான பூஜைகள் முடிந்தபிறகும் புனிதமான நாட்களிலும் ஆராத்தியின் பொழுது சங்கு ஊதப்படும். கிராமங்கள் சிறியனவாக இருந்தால் சங்கொலி அனைவருக்கும் கேட்கும்.ஆலயத்திற்கு நேரில் வரமுடியாதவர்கள் சங்கொலி கேட்டவுடன் தாங்கள் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு கணநேரம் மனதால் இறைவனைத்தொழுவர்.இவ்வாறு சங்கொலி அவரவர் கடமையைச்செய்துகொண்டே மனதை இறைவன்பால் திருப்ப வழிவகுத்தது. ஆலயங்களிலும் வீடுகளிலும் இறைவனின் முன் சங்கு வைக்கப்படுகின்றது.சங்கு நாதபிரம்மத்தை (பேருண்மையை) வேதங்களை மங்கலத்தை குறிக்கின்றது. பக்தர்களுக்கு புனித நீரைப்பிரசாதமாக அளிப்பதற்கும் சங்கு பயன்படுத்தப்படுகிறது. இப்புனித நீர் பக்தர்களின் உண்மைப்பரம்பொருளை நோக்கி உயர்த்துகிறது.

த்வம் புரா ஸாக. ரோத்பன்ன விஷ்ணுனா வித்ருத கரே
தேவைம்ச பூஜித ஸர்வை பாஞ்ச ஜன்ய நமோஸ்துதே.

(பாற்) கடலில் பிறந்து மஹாவிஷ்ணுவின் கையை அலங்கரிப்பதும் தேவர்களால் வணங்கிப் போற்றப்பட்டதுமான பஞ்ச சன்னியத்தை நமஸ்கரிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தின்
# அர்த்தங்களை அறிவோம்.

பேராசிரியர்.பொன்.சக்திவேல்.

இந்துமதம் கட்டுப்பாடற்றது.இது மனிதனுடைய வாழ்வு காலத்தையோ பிறப்பையோ கட்டுப்படுத்தவில்லை.ஆனால் இந்துமதத்தில் கடப்பாடு உண்டு ஒவ்வொரு மனிதனின் செய்பாடுகள் அனைத்திற்கும் பலனை எதிர்பார்க்க வேண்டும்.இவை அனைத்தும் கர்ம வினைக்கட்டுப்பாடாக இருக்கும் இது இந்துமதத்தின் முக்கிய நம்பிக்கையாகும்.

பரமப்பிரான்: எல்லா வல்லமையுடைய கடவுள் ஒருவர். இவரே சிருஸ்டிப்பவர் பரிசுத்தமானவர் மேன்மையானவர் இவரே மோட்சத்தை அருளுவார்.

அவதாரம்: இக்கடவுள் பலவகையான செயல்கள் மூலம் தர்மத்தை வளர்த்து விடுதலை கொடுக்கக்கூடியவர்.

கர்மவினை: செயல்களுக்கு கிடைக்கும் நன்மை தீமைகள் கர்மவினை முற்பிறப்பில் இருந்துவரும் இப்பிறப்பு செயல்களால் வரும் பிறப்புகளின் கர்மவினை தொடரும்.இந்துதர்மம் பல கண்டுபிடிப்புக்களின் ஆரம்ப காலமாக உள்ளது.இஃது பல உண்மைகளை ஆதியிலேயே எடுத்துக் கூறியுள்ளது. இஃது பரந்த அறிவை வளர்க்கும் சீலத்தையே உருவாக்கியுள்ளது. வேதாந்தம் பல வரலாறுகளை கூறுகின்றது. அவையாவும் நீதிநெறியை வளர்க்கின்றன. வேதாந்தம் கூறும் கருத்துக்கள் யாவற்றையும் இறைவனே கண்டுள்ளார் எனவும் வேதாந்தம் பழம்காலம் முதல் வாய்மொழிமூலம் பரவிவந்தது இருந்தபோதும் தற்போதுள்ள வேதாந்தங்களில்

இருக்குவேதம் 10552 மந்திரங்களும்
யசுர்வேதம் 1975 மந்திரங்களும்
சாமவேதம் 1875 மந்திரங்களும்
அதர்வவேதம் 5987 மந்திரங்களும் உள்ளன.



வேதம் எனப்படுவது அறிவாகும். மனிதவாழ்வுக்கு இவற்றுள் இரண்டை அறிந்திருத்தல் முக்கியமானதாகும்.

அபரவித்தை - உலகுபற்றிய அறிவு

பரவித்தை - தெய்வீகம் பற்றிய அறிவு.வேதமானது உலகுக்குக் கிடைத்த ஞானக்களஞ்சியம் ஆகும். இது சித்திரம் சங்கீதம் இலக்கியம் பொருளாதாரம் சமயம் விண்ணுலகசெய்திகள் தத்துவம் எல்லாவற்றையும் அடக்கியுள்ளது.அமெரிக்க விஞ்ஞானி உலகு பற்றிக் கூறிய போது எப்போதாவது நான் வேதத்தின் எந்தப்பகுதியியைக் கேட்கும் போது என்னுள்ளே ஞானத்தெளிவும், ஞான ஒளியும் ஏற்படுகின்றது.வேதம் மிகப்பெரிய தத்துவத்தை விளக்குகிறது எனக்கூறுகிறார்.

உலகின் முதலாவது பல்கலைக்கழகம் 2700 ஆண்டுகளுக்கு முன் துவங்கியுள்ளது.இந்தியாவின் வடமேற்குத் தக்காசியாவில் உள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவர்கள் மட்டுமன்றி பபிலோனியா கிறிஸ் சிரிய அரேபிய சீனா மாணவ மாணசியர் படித்துள்ளனர்.இங்கு அப்போது 68ற்கும் மேற்பட்ட பாடத்திட்டங்கள் கற்பிக்கப்பட்டும் உள்ளன. இதேபோன்றே (0)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைபரை கண்டுபிடித்தவர்களும் இந்துமக்களேயாகும்.சைபர் இல்லை கணிதப் பயன்பாடே இருந்திருக்காது.இது இல்லாவிட்டால் கணணி இயந்திரம் கூட கண்டுபிடிக்கப்பட்டிருக்காது. இயந்திர தகடுகளில் கணித உருப்பொறிக்கப்பட்ட குஜராத்தில் கிறிஸ்துக்கு முன் 585-586 கண்டுபிடிக்கப்பட்டது.



பிரம்மபுத்ரா சித்தாந்தம் எனும் பிரமகுப்தா என்பவர் 7ம் நூற்றாண்டில் பதிப்பித்தார் எனவும் இஃது 8ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களாலும் அரேபியர்களாலும் பாவிக்கத் தொடங்கினர். சைவர் சூனியத்தை ஆரம்பத்தில் கண்டுபிடித்தது சமஸ்கிருதத்தில் 2ம் நூற்றாண்டிலேயே சூனியம் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பின்கலாசந்து சூத்திரம் கூறுகிறது.
(மேற்கூறிய தகவல் அனைத்தும் இலண்டன் ஸ்ரீ சுவாமி நாராயண மந்தீரில் உள்ள இந்து சமயத்தை அறிவோம் எனும் கண்காட்சிமூலம் பெறப்பட்டது.)

# தியாகமும் தொண்டும்

நம் வாழ்க்கைத் திட்டம் என்ன? வாழ்க்கை லட்சியம் என்ன? இந்த உடல் இருக்கும் போதே சுகம் துக்கம் குளிர் வெப்பம் நண்பன்எதிரி விருப்பு வெறுப்பு ஆகிய இருமைகளிலிருந்து விடுபட்டு நமக்குள்ளிருக்கும் ஆனந்தத்தில் இலயித்து இருப்பது நம் லட்சியம்.மோட்சம் அல்லது விடுதலை நமது குறிக்கோள்.இது தனி மனிதனின் லட்சியம்.

தேசிய இலட்சியம்? தர்மத்தைக்காப்பாற்றி இந்தநாட்டை எல்லாத்துறைகளிலும் மகோன்னத நிலைக்கு உயர்த்தி உலகின் முன்னே ஒரு லட்சிய சமுதாயத்தை அமைத்துக்காட்டி உலகுக்கு வழிகாட்டுவதே நம்தேசியலட்சியம்.லோகாஸ் ஸமஸ்தா ஸுகினோபவந்து (எல்லோரம் இன்புற்றிருக்க நினைப்பதவெயல்லாமல் வேறொன்றறியேன் பாராபரமே) இதுதான் நமது தெசிய இலட்சியம். காம குரோதங்களால் ஆறுவகை எதிரிகளால் தாக்கப்பட்டு வருகிற உலக மக்களுக்கு மாற்றுப்பாதை காட்டி உலகு உய்ய வழிகாட்டுவது நமது தேசிய இலட்சியம்.

தனிமனிதன் தர்மப்பாதையைக் கடைப்பிடிப்பதன் மூலம் விடுதலையடைகின்றான்.நாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள ராஷ்ட்ர தர்மத்தின் மூலம் நாடு உய்வடைகின்றது. தர்மம் என்றால் ஒழுக்கம் கட்டுப்பாடு ஒற்றுமை என்று கூறலாம்.தனிமனிதன் இந்த தர்ம நெறியால் மோட்சம் எய்தலாம். நாடு முன்னேறமுடியும். விவேகானந்த அடிகள் இதனையே சுருக்கமாக ஆத்மனோ மோட்சார்த்தம் ஜகத் ஹிதாயச என்று ஆத்மாவின் மோட்சத்திற்காகவும் உலக நலனுக்காகவும் என்று விளக்கி நமது மூதாதையர்கள் அளித்துள்ள கருத்துக்களை இரண்டு சொற்களால் வர்ணித்துள்ளார். அந்த இரண்டு சொற்கள் 1.தியாகம் 2.தொண்டு நமது தினசரி வாழ்க்கையில் தியாகமும் தொண்டுணர்வும் வந்துவிட்டால் நாமும் முன்னேறி நாட்டையும் தலைசிறந்த நாடாக உருவாக்க நம்மால் முடியும். நாம் கண்மூடுவதற்குள் தியாகம் எனும் ஏணியில் தொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஏணியில் இத்தனை படிகளை ஏறுவேன்.இந்த அளவுக்குப்பற்றற்று வாழுவேன்.என்று இல்லை நிர்ணயித்து முன்னேற முடியும். ஒரு நண்பன் பொதுப்பணி ஒன்றுக்காக
ஐயாயிரம் ரூபாய் கொடுத்தார்.எங்களுக்கு வியப்பு அவரிடமே இதுபற்றிக்கேட்டோம்.அந்த அளவுக்கு அவர் பணக்காரரல்ல. எப்படிக்கொடுக்க முடிந்தது எனக்கேட்டோம்.பற்றற்று ஆசைகளை விட்டு வாழநினைக்கிறேன். இந்தத்தொகையைக்கொடுத்தால் மனம் என்ன பாடுபடும் என்று பார்ப்பதற்காகத்தான் கொடுத்தேன்.மனது ஒன்றும் சொல்லவில்லை.என்று அலட்சியமாகக் கூறினார். நாங்கள் வாயடைத்துப்போனோம்.

இறைவன் நமக்குக்கொடுத்துள்ள உடல் மனம் அறிவு ஆகியவற்றையும் அவற்றால் சம்பாதிக்கின்ற செல்வங்களையும் சமுதாயவடிவிலுள்ள பரமாத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்வதே தியாகம் தொண்டு ஆகியவற்றின் குறிக்கோள். ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து அந்தத்துறையில் பிரதிபலனை எதிர்பாராமல் சுயநல எண்ணமின்றி இறைவழிபாடாகத் தொண்டு செய்துவர வேண்டும்.அந்தத் தொண்டு செய்து வரும்போதே நமது உயிர் பிரிய வேண்டும்.இது இலட்சியம். நிஷ்காம கர்மயோகமாக அது மாறிவிடும். பலனும்தரும். கர்வமின்றி இப்படி வாழ்கின்ற மனிதன் தன்னைச்சுற்றி வாழுகிறவர்களுக்குத் நண்பனாகத் தொண்டனாக வழிகாட்டியாக விளங்குவான்.இன்றைய இழிநிலையிலிருந்து நாட்டையும் நம்மையும் மீட்க இது ஒன்றே உபாயம்.

T.பிரணவன்
(சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்)

## கொழும்பு சங்கத்தமிழ் (இந்து) மன்றம்.

1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சங்கத் தமிழ் இந்து மன்றம் கடந்த 7 ஆண்டுகளாக மிகவும் வெற்றியுடன் பல சமய சேவைகளை செய்து வருவதோடு 7வது வருட பூர்த்தியை முன்னிட்டு " சமயப்பிரியா" என்னும் மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இம்மன்றத்தால் அறநெறிப் பாடசாலையும் கடந்த 7 வருடகாலமாக நடாத்தப்பட்டு வருகின்றது. இம் மன்றம் மேலும் பல சாதனைகளைப் புரிந்து சேவையாற்ற வேண்டுமென சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் சங்கநாதம் ஆகியன இணைந்து வாழ்த்துகின்ற. இம் மன்ற அங்கத்தினரின் விடாமுயற்சியும் அவர்களின் சேவையும் மிகவும் பாராட்டத்தக்கது. அவர்கள் சேவை என்றும் தொடர எமது நல்லாசிகள்உரித்தாகுக.

நாம் விரும்புவதை பெறுவதும் பெற்றதை
அனுபவிப்பதும் நமது முயற்சியால் மட்டுமே முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கண்ணதாசன் உங்களுடன்



## வாழ்க்கை என்பது வாழவே

*விசையுறு பந்தினைபபோல் உள்ளம்*
*வேண்டியபடி செல்லும் உள்ளம் கேட்டேன்.*

என்கிறார் மகாகவி.

மனம் சொல்லவேண்டுமாம் உடல் ஆடவேண்டுமாம். மனம்போல என்றால் உடல் போக வேண்டும். ஐயோ எல்லோரும் போகிறார்கள் நாம் போக முடியவில்லையே என்று மனம் ஏங்க உடல் போகமுடியாமல் தள்ளாட இந்த நிலைமை வருமானால் மனித வாழ்க்கையில் என்ன சுகம் இருக்கிறது. எனவே தான் மனதை அடக்கி உடம்பை நன்றாக வைத்துக்கொள்ளவேண்டும். நாட்டிலே உடல் நோயாளிகளைவிட மனநோயாளிகள் அதிகம். வறுமை, கஷ்டம் என்றால் பரிகாரம் தேடலாம். இனம்தெரியாத துயரம் மண்டிக்கிடக்கிறதே என்னசெய்வேன் என்று அழுபவர்கள் அதிகம். அந்தத் துயரத்தாலே உடம்பு ஆட்டி வைக்கப்பட்டு மனளதைக் கெடுத்துக் கொண்டவர்கள் அதிகம். இவர்களெல்லாம் ஒருகாலகட்டத்தில் சீராகத் துணிச்சலோடுஎதையும் எதிர்த்து நிற்கின்ற தன்மையோடு வந்தோம் .பிறந்தோம், சாதித்தோம் என்று முடிவுகட்டிக்கொண்டு வாழவேண்டும். வருவதும் போவதும் ஆண்டவனுடைய போக்குவரத்துச்சாலை விதி . ஆண்டவன் அதிலே டிராபிக்கமிஷனர். அவர்போட்ட உத்தரவின்படியேதான் சிலவிசயங்கள்நடைபெறுகின்றன. ஆறுவயதிலே குழந்தைகள் இறந்து போகின்றன. பதினாறு வயதிலும் இறந்து போகின்றன. அழமுடிகிறதே தவிர திருப்பிக்கொண்டு வரமுடிவதில்லையே. சிலர் நூறு வயது வரை வாழ்கிறார்கள். எவனோ ஒருவன் இறக்கிறான். ஏதோ ஒருசக்தி இயங்குகிறது. அந்தச்சக்தியின் கரங்களிலிருந்தே அத்தனையும் புறப்படுகின்றன. அந்தக்கரங்களையே அடைகின்றன. இந்த நியாயத்தை மதித்து உன்னையே நீ அறிந்து உலகையும் அறிந்து எல்லோருக்கும் வேண்டியவனாகவும் எல்லோருக்கும் நல்லவனாகவும் எல்லோரையும் புரிந்து கொண்டவனாகவும் எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டவனாகவும் வாழவேண்டும் என்பதே என்னுடையஆசை.

மன ஆரோக்கியத்திற்குச் சிறந்த மருந்து மௌனத்தைத் தவிர வேறொன்றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக உலா வரும் சங்கு

**கோயில் நிலம் விற்பனை:**

பிரசித்திபெற்ற பூரி ஜெகன்நாதர் கோயில் நிலத்தை விற்பனை செய்ய ஒரிஸா அரசு முடிவு செய்துள்ளது. இந்தக்கோயிலுக்கு ஒரிஸா மற்றும் உ.பி மாநிலங்களில் நிலம் உள்ளன.ஆனால் அவற்றில் இருந்து வருமானம் இல்லை.இதனால் தேவையற்ற நிலங்களை விற்று அந்தப் பணத்தை வங்கியில் போட்டு அதில் இருந்து கிடைக்கும் வட்டியைச் செலவழிக்க அரசு முடிவு செய்துள்ளது.ஒரிஸா சட்ட சபையில் மந்திரி விஸ்வபூஷண் இதைத் தெரிவித்துள்ளார். கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் இருந்து 203.22 ஏக்கர் நிலம் ரூ.2.25 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. வங்கிச் சேமிப்பில் உள்ள இந்தப்பணத்துக்கு மாதம் ரூ.66.412 வட்டி கிடைத்துள்ளது என்றார் அமைச்சர்.

**<u>பஜனைபாடினால்கொலை:</u>**

ஹரிராம சங்கீர்த்தனை செய்தால் கொல்லப்படுவீர்கள். கிறிஸ்தவர்களாக மாறி ஏசுவை வழிபட்டுஉயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். இந்து சமயத்திற்கு தலை முழுகுங்கள் என திரிபுராவிலுள்ள இந்துக்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர். புதியதாக மதம் மாறி உள்ள கிறிஸ்தவப் பழங்குடியினர்களுடன் இணைந்து சி.பி.எம் கம்யூனிச அரசும் இதன் பின்னணியில் இருப்பதாகத் தெரிகிறது மாநிலம் முழுவதும் ஹரிநாம சங்கீர்தனை பாடக்கூடாது மீறினால் கொல்லப்படுவார்கள் என இந்துக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இதனை மீறும் பழங்குடியினர் கிறிஸ்தவர்களால் தாக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டும் உள்ளார்கள். ஒவ்வொருமுறையும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும் போது உள்ளூர் அரசு இயந்திரங்கள் (போலிஸ் அதிகாரிகள்) பாராமுகமாக இருந்து கிறிஸ்தவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அம்பாசா என்ற இடத்திலுள்ள சைலேந்திர சம்பிரதாயா என்ற ஹரிநாம சங்கீர்தனை அமைப்பு புகழ்மிக்கது அதிலுள்ள திரு.பிஜோய் தேப்பார்மேன் என்ற இந்துப்பழங்குடி பாடகர் மற்றும் அவரது புல்லாங்குழல் இசை ஆகியவை மிகவும் பிரசித்தம் அவர் ஹரி புகழ் பாடக்கூடாது புல்லாங்குழல் வாசிக்கக்கூடாது எனவும் மீறினால் அவரது கையையும் கால்களையும் வெட்டிவிடுவோம் எனவும் மிரட்டப்பட்டுள்ளார்.

தளராத முயற்சிக்குத் தன்னம்பிக்கை அவசியம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபிறப்பின் மறைவில் மறைந்திருக்கும் மர்மம் தான் என்ன?

(8) எமன் உலகத்தை அடைந்தபின் எமராஜன் முன்னிலையில் ஆன்மா செய்த புண்ணிய பாவங்கள் விசாரணை செய்யப்படுகின்றன. எழுதி வைத்த ஏட்டிலிருந்து சித்திரபுத்திரனார் வாசிக்கிறார் பின்பு எமராஜன் தீர்ப்பளிக்கிறார்.

(9) சில வேலைகளில்உரிய காலத்துக்கு முன் சில ஆன்மாக்கள் தவறாக இழுத்துச் செல்லப்படுகின்றன. இவை உடனேதிருப்பி அனுப்பப்படுகின்றன. தூல உடம்பு எரிக்கப்பட முன் திரும்பி வந்தால் அவ்வுடம்புக்குட் புகுந்து உயிர்த்தெழுவர் எரிக்கப்பட்டு விட்டால் உரிய காலம்வரையும் ஆவியுருவில் இவ்வலகிற் சஞ்சரிப்பர்.

(10) தீர்ப்பின் பின்பு செய்த வினைகளின் பயன்களை அனுபவிப்பதற்கு ஆன்மாக்கள் தேவர், பிதிர், காந்தர்வர் நரகர் உலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நரகங்களும் பாவஞ் செய்தவர்களின் ஆன்மாக்ள் அங்கு அனுபவிக்கும் தண்டனைகளும் விபரமாகக் கூறப்படுகின்றன.

(11) சுவர்க்கங்களில் புண்ணியங்களின் பயன்களையும் நரகங்களில் பாவங்களின் பயன்களையும் அனுபவித்த பின்பு ஆன்மா மறுபடியும் இவ்வுலகிற் பிறக்கிறது.

(12) மிகப் பெரும்பாலான புராணங்கள் இறைவன் திருவருளைப் பற்றியவையாகும். இறைவனின் திருவிளையாட்டுக்களைக் கூறுகின்றன. என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இதுவரை பௌத்தமதம், கிறீஸ்தவம், இந்துமதம் போன்றன மறுபிறப்புப்பற்றித் தங்கள் கருத்துக்களைக் கூறுகிறார்கள். மறுபிறப்புப் பற்றி ஆவியியலாளர்களும் தற்கால மேனாட்டு அறிஞர்களும் என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம்.


ஆவியலாளர்கள்

(1) இறைவன் ஒருவன் உளன். அவன்எல்லா உலகங்களையும் கடந்தவன் எல்லா உலகங்களிலுங் கலந்தும் இருக்கிறான். ஆவனுடைய அன்பும் அருளுங் கருணையும் எங்குமுள. அவனுடைய தூதுவர் எல்லா உலகங்களிலும் ஆவிகளை மீட்டுங் கருணைச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

(2) ஆவிகள் பல இவை இறைவனை நோக்கிப் பயணஞ் செய்கின்றன. இது நெடுந்தூர, நெடுங்காலப் பயணமாக இருக்கலாம்.

(3) ஆவி அழிவதில்லை அது நித்தியமானது இறக்கும் போது ஆவி இவ்வுலகையும் இவ்வுடம்பையும் விட்டு நீங்கி வேறோர் உலகுக்குப் போகிறது அவ்வுலகில் வாழ்கிறது சுவர்க்கங்களும் நரகங்களும் பலவுள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



G.சுமதி & M.வாணிதாஸ் இணை ஆக்கம்

முறுபடியம் இவ்வுலகிற் பிறக்கிறது.

(4) சுவர்க்கத்தை அடைந்த ஆவி படிப்படியாகப் பல சுவர்க்கங்களைக் கடந்து ஈற்றில் இறையுலகை அடைகிறது. மூன்றாவது சுவர்க்கத்தைக் கடந்த ஆவி மறுபடியும் இவ்வுலகிற் பிறப்பதில்லை. முதல் மூன்று சுவர்கங்களினாலும் ஈர்க்கப்பட்டால் மறுபிறப்பு எடுக்கலாம்.

(5) மூன்றாவது சுவர்க்கத்துக்கு மேலான சுவர்க்ங்களில் வாழும் பரமாத்மாக்களும் ஆசிரியர்களும் சில வேளைகளில் மக்களுக்கு வழி காட்டுவதற்காகவும் அவர்களை இரட்சிப்பதற்காகவும் இவ்வலகிற் பிறக்கலாம். இவர்களுக்குக் கன்மம் இல்லை பந்த பாசங்களில்லை. இவர்களுடைய பிறப்புக் கருணைச் செயலாகும். தேவகுமாரனை யேசுநாதரே மக்களை இரட்சிக்க இவ்வுலகிற் பிறந்தார்.

(6) நரகங்களில் வாழும் ஆவிகளும் மறுபிறப்பு எடுக்கலாம். இவ்வுலகப் பாசங்களும் மோகங்களும் இருக்கும் வரையும் பிறப்புறுப்புச் சூழலிலிருந்து தப்பமுடியாது. இறைவனை உணர்ந்து திருந்திச் சுவர்க்கஞ் செல்லலாம்.

(7) ஆவிகள் தாம் செய்த வினைகளின் பயனை இவ்வுலகிலும் மறு உலகங்களிலும் அனுபவிக்கின்றன. இஃது இயலுலக நியதியாகம் வினைப்பயன் தொடர்ச்சியானது பழிக்குப் பழியானது.

(8) அன்பு, அறம், இறைபக்தி, நற்சிந்தனைகள் தன்னலங்கருதாப்பொதுநலச் சேவைகள் மெஞ்ஞானம் முதலியவை இறைவனை அடைவதற்கு வழிகளாகும். ஆவி இறையுணர்வாகி இறைவனைச் சரணடைந்து தன்னை இறைவனுக்கு ஒப்படைக்க வேண்டும்.

(9) என்றும் ஆவிக்கு இறைவன் அருளுண்டு ஆனாற் பக்குவமடையாது ஆவி முன்னேற முடியாது இதனது பக்குவத்துக்கேற்ற உலகில்வாழும் .

என ஆவியியலாளர்கள் தங்கள் கருத்தைக் கூறுகின்றனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையமுதம்

# மனித வாழ்கையில் நவரசம்

இன்றைய சமுதாயத்தில் மனிதனின் அன்றாட வாழ்கையில் நவரசங்களையும் சந்திக்கின்றான்.அவனுடைய அறியாப்பருவத்தில் அவன் ஒன்றுமே தெரிந்துகொள்ளமுடிவதில்லை.பச்சைப்பிள்ளையாக இருக்கும் போது அழுகையும் சிரிப்பும் தவிர வேறொன்றும் தெரியாது. பின் சிறுபிராயத்தில் தான் தனது சொந்தம், பந்தம், சுற்றம் என்பனவற்றை அறிந்து கொள்கின்றான்.அப்போதுதான் அவனுக்குப் போட்டி, பொறாமை, ஆசை என்பன தோன்றுகிறது.இடைப்பட்ட பருவத்தில் கோபம் தாபம் வீரம் என்பனவற்றை அறிந்து கொள்கின்றான். வாலிபப் பருவத்தில் சிருங்காரத்தை உணர்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றான். இந்த வாழ்கையானது நன்றாகவும் அமையலாம். அவலமாகவும் அமையலாம். மனிதன் தன் குடும்பத்தின் நன்மைக்காக உழைக்கின்றான் அவ்வுழைப்பு பிரயாசையாக வந்தும் மேன்னையாகலாம்.மனிதனுக்கு பொறுப்புக்கள் அதிகமாக அவனுக்குப் பலவித இடையூறுகள் வருகின்றன.அந்த இடையூறுகளால் இறைவனை நினைக்கத் தொடங்குகிறான். பொதுவாக எல்லோரும் வசதியாக இருக்கும் சூழ்நிலையில் இறைவனை நினைப்பதில்லை.அளவில்லாத்துன்பங்கள் வரும் போது தான் இறைவனை நினைக்கின்றோம்.இது மனித இயல்பு. தாங்கொண்ணாதத் துன்பங்கள் வரும்போதுதான் மனிதன் வாழ்கையில் கசப்பு, வெறுப்பு, சலிப்பு, அருவருப்பு போன்ற ரசபாவங்களைச் சந்திக்கின்றான். அதனால் வாழ்கையின் ஓரத்திற்கே போய்விடுகின்றான்.

மனம் ஒரு குரங்கு. ஆம் மனித மனம் குரங்கின் மனம் போன்றது. ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டும், தாவிக்கொண்டும் இருக்கும் மனிதனுக்கு எவ்வளவு வசதி வாய்ப்பு இருந்தாலும் அவன் திருப்தி அடைவதில்லை.திருமூலர்கூடத் தனது திருமந்திரத்திலே

ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே

மனிதனுக்குப் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை எல்லாம் நப்பாசையாக மாறி பேராசையாக உருவெடுத்து முடிவில் வாழ்க்கையையே அழித்துக் கொள்கிறான்.எனவே மனிதனுக்குள் இருக்கும் ஆசைகள் தான் நவரசமாக அவனை ஆட்டிப்படைக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கைளில் அன்றாட நிகழ்ச்சியில் நவரசங்களையும் சந்திக்கின்றான்.இனியும் சந்திப்பான். வாழ்க்கையில் வரும் நவரசங்களை மாற்றவோ, அழிக்கவோ முடியாது. மனிதன் இறந்த பின்தான் நவரசங்களும் அடங்க சாந்தத்துடன் அமைதியாகின்றான். பிறவிகளில் சிறந்த பிறவி மானிடப்பிறவி என்பது கூற்று. மானிடப்பிறவியின் தத்துவத்தை எப்போது மனிதன் அறிகிறானோ அப்போதுதான் மனிதன் பூரணத்துவப் பலனை அடைகின்றான்.

திருமதி.பிரகதா தில்லை நடராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதக்குருக்களுடன் ஓர் நேர்காணல்

வீடுகளில் நடக்கும் கிரகப்பிரவேசம் என்பது.....................

புதுமனை என்பது முதன்முதலாக ஒரு இடத்தை வாங்கிவிட்டால் ஒருயோசியரிடம் சென்று நல்ல நட்சத்திரத்திலே அத்திவாரம் போடக்கூடிய ஒருமுகூர்த்த நேரத்தை எடுத்து நல்லநாளிலே அங்கு வாஸ்து பூஜை. வைபபூஜை நிகழ்த்தி அத்திவாரம் இட்டு வீட்டைக்கட்டி முடிக்கின்றோம். அதன் பின்பு நல்ல நாள் நட்சத்திரத்தினை தெரிவு செய்து அந்தக் கிரகப் பிரவேச முகூர்த்தத்தில் வாஸ்து சாந்தி செய்யவேண்டும். இங்கு வாஸ்து என்பவன் சிவபெருமானின் வியர்வையிலிருந்து வருபவன். அவன் தனக்குப் பசி தாங்கமுடியபமல் தேவர்களையும் மற்றவர்களையும் கடித்து உண்ண ஆரம்பித்துவிட்டதனால் தேவர்கள் அவனைப் பிடித்துத் தலைகீழாகக் கட்டிவைத்துப் பட்டினி போட்டனர். இந்தநேரத்திலே வாசு என்பவன் சிவனிடம் தன்னை பட்டினி போடாதீர்கள் எனக்கு ஏதாவது தண்டனை கொடுங்கள் என்று வேண்டினான். அப்பொழுது சிவபெருமான் இவ்வாறு கூறுகிறார் யார் யார் வீடு கட்டுகிறார்களோ அங்கு நீ போய் படுத்திரு. உனக்க வாஸ்து என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு கொடுக்கப்படும் பலி பூசனிக்காய், தேசிக்காய் என்பவற்றையும் சாப்பிட்டு விட்டு அவர்கள் பூசை செய்ததும் வேறு யார் யார் வீடுகட்டுகிறார்களோ அவர்களது வீடுகளுக்கு போய்ப் படுத்திருஎன்றார் சிவன். சிவனுடைய வேண்டுகோளுக்கேற்ப வாசு என்பவன் தனது தலையை ஈசான மூலையில் வைத்துக்கொண்டு காலை நீட்டி கவிழ்ந்து படுத்துக்கொள்வான். அப்படிப்பட்ட வாஸ்துவை நாங்கள் காசு கொடுத்து வீடு வாங்கினாலும் வீட்டுக்குச் சொந்தமானது இந்த வாசுதான். பூஜை செய்யாவிட்டால் வாஸ்து என்பவனை வைக்கோலில் செய்து அவனுக்கு தேவையான பலிகளை செய்து அதை வீடு முழுவதும் சுத்தி வெளியில் கொண்டு போய் எரிக்கவேண்டும். எரிந்த சாம்பல்தான் அவனுக்க சாந்தியைக்கொடுக்கும்.

அப்படிப்பட்ட வாஸ்து சாந்தியைச் செய்து கணபதி நாமம். சுப்ரமணிய நாமம். லஷ்மி நாமம். நவக்கிரக நாமம் எல்லாம் செய்து கதவுகளுக்கு எல்லாம் தேசிக்காய் கட்டித். தேங்காய் உடைத்து. வரும் சுபமுகூர்த்தவேளையில் பாலைக்காய்ச்சி எட்டுத் திசைகளிலும் சங்கு ஸ்தாபித்து அட்ட பைரவர்களுக்கு (இந்திரன். அக்கினி. யமன். ஜலம். வாயு. குபேரன். ஈசானம். நிருதி)சாந்தி செய்து கிரகத்தில் இருக்கும் தோசங்கள் நீக்கப்படும். இவ் தோசங்கள் நீங்கிப் பாத்திரத்தைச் சுத்தம் செய்து பால்காய்ச்சுவது போல இது வீட்டை சுத்தம் செய்கிறது. இது அவரவர் வசதிக்கேற்றபடி செய்யலாம். ஆனால் சைசமயிகளாகிய நாம் கட்டாயம் மேற்கொள்ளவேண்டிய ஒரு சாந்தியாகும்.

S.ஹரி
(சனாதன தர்மக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதன தர்ம யுவ வழிப்புணர்ச்சிக் கழகத் தலைமையகத்தில் இடம்பெறும் வாராந்த நடவடிக்கைகள்.

| | கிழமை | காலை | மாலை |
|---|---|---|---|
| யோகாசனம் | தினம்தோறும் | 6.00-7.00 | |
| | செவ்வாய்,வியாழன் | | 6.00-7.00 |
| சைவசித்தாந்தம் | ஞாயிறு | 7.30-8.30 | |
| திருக்குறள் (விளக்கவுரை) | திங்கள் | | 6.00-700 |
| திருமந்திரம் | சனி | | 5.30-7.00 |
| கூட்டுப்பிரார்த்தனை (பஜனை) | ஞாயிறு | 9.00-11.00 | |

## சங்கநாதம் சஞ்சிகை பெறக்கூடிய இடங்கள்

❖ சனாதன தர்ம யுவவிழ்ப்புணர்ச்சிக் கழகம்
No.38 Vihara Road மாத்தளை T.P : 066-33014

❖ Dr.Pa.Suresh 41 A Bus Stand, Hatton T.P: 051-24203

❖ ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய நற்பணிமன்றம்
167 அம்பக்கோட்டை, கேகாலை கண்டி 072-500413

❖ விவேகானந்த நற்பணி மன்றம்இல.150 பிரதான வீதி
தெஹியோவிட்ட

❖ ஊவா மாகாண இந்துசமய விழிப்புணர்ச்சிக் கழகம்.

எது சரி எது தவறு என நம்மால் பிரித்து உணர முடிகிறதோ அதுவே நமது வளர்ச்சியின் முதற்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பகுத்தறிவு?

(சுவாமி விவேகானந்தர்)

எல்லாத் தளைகளுக்கும் முக்கிய காரணம் அறியாமை. மனிதன் இயல்பிலேயே கொடியவன்அல்ல. ஒரு போதும் அல்ல. அவன் இயல்பிலேயே தூயவன். முற்றிலும் புனிதமானவன். ஒவ்வொரு மனிதனும் தெய்வீகமானவன். நீ காண்கின்ற ஒவ்வொரு மனிதனும் இயல்விலேயே கடவுள்தான் . இந்த இயல்பு அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறியாமையே நம்மைக் கட்டுண்டவர்களாக ஆக்கியிருக்கிறது எல்லாத் துன்பங்களுக்கும் அறியாமையே காரணம். அறிவு நம்மைச் சுதந்திரர்களாக்குகிறது! எந்த அறிவு? வேதியியலா? இயற்பியலா, அவானஇயலா? ப்'மியியலா? அவை எல்லாம் நமக்கச் சிறிது உதவுகின்றன. மிகச் சிறிது உதவுகின்றன. ஆனால் முக்கியமான அறிவு என்பது உங்கள் இயல்பே உன்னை அறிந்து கொள் நீங்கள் உண்மையில் யார்? உங்கள் உண்மை இயல்பு எது என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அந்த எல்லையற்ற இயல்பை உங்களுள் உணரவேண்டும் அப்பொழுது தளைகளெல்லாம் நொறுங்கிவிடும்.

எதையும் நம்பாதீர்கள். ஒவ்வொன்றையும் நம்புவதிலிருந்து விடுபடுங்கள் - இதுவே முதற்படி. அறிவுபூர்வமானவராக இருக்கத் துணிவுகொள்ளுங்கள். விவேகம் உங்களை எங்கே அழைத்துச்சென்றாலும் அங்கு செல்லத் துணிவுடன் இருங்கள். தேசிய அளவிலான அல்லது மனிதகுரட முழுமைக்குமே உரியதான பழைய காட்டுமிராண்டித் தனமாக மூடநம்பிக்கைகள். குடும்பம். நண்பர். நாடு. நாகரீகம். சாஸ்திரங்கள். பால் வேறுபாடு என்று ஏதேதோ சம்பந்தப்பட்ட மூட நம்பிக்கைகள் எல்லாம் நம்மைக் காட்டியுள்ளன. இதில் அறிவைப்பற்றி நாம் பேசுகிறோம்! அறிவபூர்வமாகச் சிந்திப்பது ஏதோ ஒருசிலர் மட்டுமே எதையெடுத்தாலும் நம்ப நான் தயாராக இல்லை. இருளில் உழல நான் தயாராக இல்லை. நான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆராய மனிதன் தலைப்படுகிறான்.

எண்ணற்ற கடவுள் மீதான நம்பிக்கை கடவுள் ஒன்றே என்ற கொள்கைக்கு வழி வகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக்கொத்து.

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்த ராதா சர்மாவின் (நிர்வாக இயக்குணர் ராதா நடனப்பள்ளி ஜெர்மனி) நிருத்தியாமிருதம் நாட்டிய




நிகழ்ச்சி கடந்த 13.07.2000 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது.



சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழம் சங்கநாதம் சஞ்சிகை ஆகியன இணைந்து கடந்த 15.07.2001 ஞாயிறு மாலை 4.15 மணிக்க வெள்ளவத்தைஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில் மதமாற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.இக்கலந்துரையாடலில் சுவாமி. தந்திரதேவா சுவாமி. விஜ்ஜானந்தா. சுவாமி. பிரமச்சாரி ரமணசைதன்யர். கம்பவாரிதி இ.ஜெயராஜ். கு.குமாரலஷ்மி(கழகபோஷகர்) கழகத்தின் தலைவர் பொருளாளர் உட்பட நாற்பதிற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின் போது மதமாற்றம் எவ்வாறு பரப்பப்படுகின்றது அதை தடுத்து நிறுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Cover page designed by
V.Nilesh
Rotax Limited

Designed & Printed by
SHARP GRAPHICS [PVT] LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org